

# திருக்கோயில்

ஜனவரி 1988 விலை ரூ. 3









அறநிலையத்துறையின் துணை ஆணையாளர் மற்றும் உதவி ஆணையாளர் மறுபயிற்சி நிறைவு விழாவில் மாண்புமிகு அறநிலையத்துறை அமைச்சர் திருமிகு வி. வி. சுவாமிநாதன், பி.எஸ்சி., பி.எல். அவர்கள் கலந்துகொண்டு சான்றிதழ்களை வழங்கினார். இதே விழாவில் ஆலயப்பணியாளர்களுக்கு ஆலய மேம்பாட்டுத் திட்ட நிதி உதவிகளையும் மாண்புமிகு அமைச்சர் வழங்கினார். அறநிலையத்துறையின் அரசுச் செயலாளர் திரு. கு. ஆளுடையப்பிள்ளை, ஐ.ஏ.எஸ்., ஆணையர் திரு. தி. இராச. கல்யாணசுந்தரம், ஐ.ஏ.எஸ், இணை ஆணையாளர்கள் திரு. ம. சூரியராஜ் மற்றும் திரு. இரா. தண்டபாணி, துணை ஆணையர், திரு. ந. ச. இராமச்சந்திரன் ஆகியோர் இவ்விழாவில் கலந்து கொண்டனர்.





முகப்பு: மாண்புமிகு தமிழக முதல்வர் பொன்மனச் செம்மல் டாக்டர் அமரர் எம்.ஜி.ஆர். அவர்களின் வண்ணப்படம் இவ்விதழ் முகப்பை அலங்கரிக்கிறது.

# திருக்கோயில்

இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை,
119 நுங்கம்பாக்கம் நெடுஞ்சாலை,
சென்னை-600 034.

தொலைபேசி எண்: 479407

ஆசிரியர்: கவிஞர் டாக்டர்
த. அமிர்தலிங்கம், M.A., Ph.D.

| மாலை: 30 | திருவள்ளுவர் ஆண்டு 2019 ஜனவரி 1988 | பிரபவ ஆண்டு தைத் திங்கள் விலை ரூ. 3-00 | மணி: 1 |
|---|---|---|---|

## திருக்கோயில் வாசகர்களுக்கு முக்கிய அறிவிப்பு

அன்பு வாசகர்களே! வணக்கம்.

அண்மைக்காலங்களில் தாங்கள் திருக்கோயில் இதழுக்கு வழங்கி வரும் அமோக வரவேற்பிற்கு மனம் நிறைந்த நன்றியை முதலில் தெரிவித்துக் கொள்கிறோம். உயர்ந்துவரும் தாள்விலை, அச்சகக் கட்டணம் ,அஞ்சல் தலைக்கட்டணம், அச்சுக்கட்டைகள் கட்டணம் ஆகியவற்றை ஈடுகட்டும் வகையில் 1988 ஜனவரி முதல் திருக்கோயில் தனி இதழ் விலையை ரூ. 2 விருந்து ரூ. 3 ஆக உயர்த்தியிருக்கிறோம் என்பதைத் தெரிவித்துத் தங்கள் ஒத்துழைப்பைத் தொடர்ந்து நல்கிட வேண்டுகிறோம்.

**உயர்திரு ஆணையர் அவர்கள்**
**அறநிலைய ஆட்சித்துறை,**
**சென்னை-600 034.**

என்ற முகவரிக்கு மணியார்டர் அல்லது வங்கி வரைவோலை மூலம் பணம் அனுப்பிச் சந்தாதாரராகச் சேர்ந்து கொள்ளலாம்.

### சந்தா விவரம்

| | | |
|---|---|---|
| அரை ஆண்டு | — ரூ. | 18-00 |
| ஒரு ஆண்டு | — ரூ. | 36-00 |
| ஆயுள் | — ரூ. | 300-00 |

சந்தாதாரர்கள் முழுமுகவரியைத் தெரிவிக்க வேண்டும். முகவரியில் மாற்றம் இருப்பின் உடனுக்குடன் தெரிவித்திடவும் வேண்டும்.
**எல்லா ஊர்களுக்கும் முன் பணம் கட்டும் விற்பனையாளர்கள் தேவை.**

## பொருளடக்கம்

கந்தவேள் கருணை
—திருமுருக கிருபானந்த வாரியார்.

இறை உணர்வாளர்கள்
—டி.வி.வெங்கட்டராமன் ஐ.ஏ.எஸ்.

வைகுண்ட ஏகாதசி
—எம். என். இராஜா.

மாணிக்க வாசகர்
—திருமதி கௌரிஇராஜகோபால்.

பங்கமில் குணத்தான் பரதன்
—புலவர் திலகம் கீரன்.

மங்கலமார்கழி
—செவ்வேள்

கமலாலயம் கண்ட கடவுள் தொண்டர்
—திருமதி சௌந்தராகைலாசம்

தெய்வத் தமிழ்
—வே. தியாகராஜன்

பாரதப்போரில் பார்த்தசாரதி
—டாக்டர் த. அமிர்தலிங்கம்

பொன்மனச் செம்மல் டாக்டர் எம். ஜி. ஆர். அமரரானார்
—டாக்டர் த. அமிர்தலிங்கம்

# கந்தவேள் கருணை



திருமுருக
கிருபானந்த வாரியார்



**திருமுருக கிருபானந்த வாரியார் சுவாமிகளின் கந்தவேள் கருணை இவ்விதழ் முதற்கொண்டு தொடர்கட்டுரைகளாக வெளியிடப்படும் என்பதை மகிழ்வுடன் தெரிவித்துக் கொள்கிறோம்.**

* *

சிவபெருமான் தம்மையடுத்த அடியார்களின் பாசத்தை நீக்கித் திருவருள் புரிவதுபோல் கைலாய மலை நல்லொளி வீசிக்கொண்டிருந்தது. முக்கண்ணும், நாற்புயமும், பொன்மேனியும் உடைய நந்தியெம்பெருமான் பொற்பிரம்பைக் கையிலேந்திக் காவல் புரிந்து கொண்டிருந்தார். ஊழிக் காலத்தும் அழியாத வெள்ளியங்கிரியின் மத்தியில் நவமணிகளின் நல்லொளி வீசிக்கொண்டு பொன்னெடுங் கோயில் ஒன்று பொலிவுற்றிருந்தது. அத் திருக்கோயிலின் நடுவில் வனப்புக்களுக்கு உறைவிடமாக விளங்கும் மணி மண்டபத்தில் நவமணிகளாலான அரியணை அமைந்திருந்தது. அதன் மேல் தெய்வமணியாகிய சிவபெருமான் அம்பிகையுடன் வீற்றிருந்தார். தேவர்கள், முனிவர்கள், சித்தர்கள் முதலியோர் எம்பிரானைத் தோத்திரம் செய்து கொண்டிருந்தனர். தும்புரு, நாரதர், கந்தருவர் முதலியோர் இனியகானம் இசைத்துக் கொண்டிருந்தனர்.

சிவபெருமானுடன் வீற்றிருந்த அம்பிகை மனத்தில் ஒன்றை நினைத்துத் துணுக்குற்றுப் பரமேசுவரை வணங்கி எழுந்தார்.

''தாட்சாயணீ! நீ காலையிலும் மாலையிலும்தான் என்னை வணங்குவாய். என்றைக்கும் இல்லாதபடி இன்று இந்த நேரத்தில் வணங்குவது ஏன்''? என்று எம்பெருமான் கேட்டார். 'பெருமானே! தேவரீரை நிந்தித்தவன் தட்சன். சிவநிந்தை புரிந்த அவன் அதற்குரிய தண்டனையையடைந்து விட்டான். ஆயினும் இந்த உடம்பு அவன்வளர்த்த உடம்பு. தாட்சாயணி என்ற பெயர் அவன் பெயரை வைத்துப் பிறந்த பெயர். தேவரீரை நிந்தித்த மாபாதகன் வளர்த்த இந்த உடலையும், அவனுடைய மகள் என்னும் பொருள்படும் இந்தப் பெயரையும் தரிக்க எனக்கு விருப்பமில்லை. இவ்வுடலை விட்டு விட எண்ணுகிறேன். தங்கள் உத்தரவின்றி இதைச் செய்யக் கூடாது. தாங்கள் எனக்கு திருவருள் புரிய வேண்டும்.'' என்று அம்பிகை வேண்டினார்.


தேவியின் பதிபக்தியினை எண்ணி வியந்த எம்பெருமான் மோனமாயிருந்தார்.

தாட்சாயணி மீண்டும் தம் கருத்தை வலியுறுத்தினார்.

சிவபெருமான் புன்சிரிப்புச் சிரித்தார். 'தேவீ! இதை நீ உளக்காகவா சொல்லுகிறாய்? உன் குலம் தழைப்பதற்காகவல்லவா சொல்லுகிறாய்? நீ நினைத்ததும் நல்லதே. அவ்வண்ணமே செய்க''' என்று அருள் புரிந்தார்.

''தேவீ! இமயமலையரசனாகிய இமவான் உன்னைக் குழந்தையாகப் பெற நெடுங்காலமாகத் தவம் செய்கிறான். நீ அவனுக்கு அருள் செய். அவனுக்கு மகளாய்ப் பிறந்து ஐந்தாவது ஆண்டில் நம்மை நோக்கித் தவம் செய். உன்னைத் திருமணம் செய்து திருவருள் புரிகிறோம்' என்றார் சிவபெருமான்.

எம்பெருமான் அருள் புரிந்தவுடன் தாட்சாயணியின் உடல் காற்றில் கற்பூரம் கரைவதுபோல்



திருப்பரங்குன்றம் அருள்மிகு சுப்பிரமணியர் ஆலயம் பாலாலய விழாவில் ஆணையர் திரு தி. இராச. கல்யாணசுந்தரம், ஐ.ஏ.எஸ். கலந்துகொண்டார்.

---

கரைந்துவிட்டது. நம்மைப்போல் ஸ்தூலசரீரம் எம்பிராட்டிக்கு இல்லை. அவள் ஞானாம்பாள். எலும்பு இலலை. தோல் இல்லை, ரததம் இல்லை, மேனி அவவளவும் ஞானம், ஞானம, ஞானமே தான்.

எழில் மிக்க இமயமலை விண்ணளாவிநின்றது. அம்மலையின் மேல் தேவாமிருதம் போனற நீரு டைய தடாகம் ஒன்று உண்டு. அதற்குப் பத்மை என்று பெயர். அத்தடாகத்தருகில்தான அம்பிகை தனக்கு மகளாய்த் தோன்ற வேண்டும் என்று பர்வதராஜன் தவம் செய்து கொண்டிருந்தான்.

ஒரு நாள் சந்தியாவந்தனம் செய்யத் தடாகத் தில் இறங்கிய இமவான் வானத்தில் பூத்தசூரியனை போல் அத்தடாகத்தில் ஆயிரத்தெட்டு இதழ்த் தாமரை ஒன்று பூத்திருப்பதைக் கண்டான். சந்தி உபாசனையின்போது சூரியனில் உள்ள எந்த பிரம்ம சக்தியை வழிபடுகிறார்களோ அந்தப் பராசக்தி கண்ணைக் கவரும் கட்டழகுடைய குழந்தையாக மரகத மேனியுடன் கமலத்தில் திரு அவதாரம் செய்திருப்பதையும் கண்டான்.

'பைத்ததோர் குழவியின் படிவத்துற்றனள் எத்திறத்துயிரையும் ஈன்ற தொன்மையாள்' என இதை நெகிழ்ந்து பாடுகிறார் கச்சியப்பர்.

எம்பிராட்டி மரகத மேனியுடன் திரு அவ தாரம் செய்தாரேயன்றிப் பெண் வயிற்றில் பிறக்க வில்லை. உலக மக்களைக் கருவில் சுமக்கும் அன்னையை யார் கருவில் சுமக்க முடியும்?

தெய்வக்குழந்தையைக் கண்ட இமவான், 'அடியேனை ஆட்கொள்ளும் பொருட்டு அகி லாணடகோடி ஈன்ற அன்னை குழந்தையாக வந்த னள்' என்று ஆனந்தக் கண்ணீர் சொரிந்தான். 'அடியேன் செய்த தவம் பலித்தது' என்று ஆனந்தக் கூத்தாடி அம்பிகையைக் கையில் எடுத்து உச்சி மோந்தான். சென்னிமேல் வைத்துக் களியாட்டம் ஆடினான்.

குழந்தையை எடுத்துக் கொண்டு தன் பொன் மாளிகை சென்றடைந்த இமவான் 'இது எம் பெருமான் கொடுத்த பிரசாதம்' என்று தனது பத்தினியாகிய மேனையின் கரத்திலே குழந்தையை கொடுத்தான். மேனை அத்தெய்வக் குழந்தையைத் தொழுது வாங்கினாள். மார்போடு அணைத்தாள். அன்பு சுரந்தாற்போல் பாலும் சுரந்தது.

பெண்குழந்தையென்றால் தாய்மார்களுக்கு சந்தோஷம், மேனை மிகவும் மகிழ்ச்சி கொண் டாள். டரிபுரம், தண்டை, சங்குவளை, ரத்தினச் சுட்டி, மதாணி, டொற்றோடு, அங்கதம் முதலான பொன்னாபரணங்களைக் குழந்தைக்குஅணிவித்துப் பொன்னால் செய்யப்பட்ட தொட்டிலில் இட்டுத் தாலாட்டினாள். (தாலு என்றால் நா என்று பொருள். நாவை அசைத்துப் பாடுவதால் தாலாட்டு என்று வந்தது).

பருவதராஜனுக்கு மகளாக வந்ததால் குழந் தைக்குப் பார்வதி என்று பெயரிட்டார்கள்.



குழந்தையை இமவானும், மேனையும், அருமையாக வளர்த்தார்கள் என்று சொல்ல வந்த கவி, 'சகல புவனங்களையும் வளர்த்து வாழ்விக்கும் தேவியை வேறொருவர் வளர்ப்பதாவது? அப்படி வளர்ப்பது போன்ற பாவனையைத் தன் அருளால் இமவானுக்கு அவள் அளித்தாள் என்றே கூறவேண்டும்' என்கிறார்;

மன்னுயிர் புவனமேனை மற்றுள பொருளுக்
　　　　　　　　　　　　　　கெல்லாம்
அன்னையா யுதவி நாளும் அவற்றினை வளர்த்து
　　　　　　　　　　　　　　நிற்பாள்
தன்னையும் வளர்ப்பா ருண்டோ வளர்த்தது
　　　　　　　　　　　　　　சழக்கே அந்தக்
கன்னிதன் அருளின் நீர்மை காட்டினள்
　　　　　　　　　　　　　　போலுமன்றே.

குழந்தை வளர்கிறது; விளையாடுகிறது. உலகையெல்லாம் விளையாட்டாகப் பெற்றெடுக்கும் ஜகன்மாதா எப்படி விளையாடுகிறாராம்? மூன்று ரத்தினங்களை அடுப்பாக ஆக்கி முத்துச் சிப்பியைப் பாத்திரமாகச் செய்து, முத்துக்களை அரியாகப் பெய்து, நவரத்தினங்களையும் வைடூரியங்களையும் காய்கறிகளாக்கி, பொற்பொம்மைகளை உண்ண வைத்து அற்புதம் அற்புதமாக விளையாடுகிறாராம்.

பார்வதி தேவிக்கு ஐந்து வயதாகிவிட்டது. ஆலமுண்ட அண்ணலின் ஆணையை நினைத்த குழந்தை, இமவானை நோக்கி, 'அப்பா! மணம் புரிந்து கொள்ளுமாறு வேண்டி மணிகண்டப் பெருமானை நோக்கித் தவம் செய்ய வேண்டும். எனக்குத் தவசாலை அமைத்துக் கொடுங்கள்'' எனக் கேட்டது.

'மகளே! ஐந்து வயதிலா தவம் செய்யப் போகிறாய்? தவம் என்றால் சாமானியமானதல்ல, பட்டினி கிடந்து உடலை வருத்தித் திட ஞானத்துடன் தவம் செய்ய வேண்டும். ஐந்து வயதில் இதனை செய்ய யாராலும் முடியாது. ஆகவே தவம் செய்ய வேண்டும் என்ற எண்ணத்தை மறந்துவிடு'' என்று இமவான் கூறினான். மேனையும் பார்வதியிடம், 'தவம் செய்வதற்கு ஏற்ற வயது இதுவல்ல'' என்று கூறினாள். 'தனியாகச் சென்று தவமிருக்கும் பருவம் இது அல்ல. பெற்றோரின் காப்பில் வளரவேண்டிய குழந்தையே இவள்' என இருவரும் கருதினர்.

(அவதார ரகசியம் பெற்றோருக்கும் மற்றோருக்கும் மறந்து தெய்வ மதலையைச்சாமானிய மானுடப் பிறவியாகவே பாவிப்பதை எல்லாப் புராணங்களிலும் காண்கிறோம். அவ்வப்போது மட்டிலுமே தன் தெய்வத் தன்மையை வெளிப்படுத்தி, மற்றப் பொழுதில் சாமானியப் பிறவி

யாகவே வாழவேண்டும் எனக் கருதிப் பரம்பொருள் இப்படி மாயை செய்யும் போலும்)

''அப்பா! இந்த உடலையும் உயிரையும் கொடுத்தவர் சிவபெருமான். அந்த ஐயனின் அருள் இன்றிப் பிறர் நம்மைக் காக்க முடியாது. உடலையும் உயிரையும் கொடுத்த எம்பிரானே என்னைக் காப்பாற்றுவார். தடை சொல்லாமல் தவம் செய்வதற்கு விடை தாருங்கள்'' எனப் பார்வதியம்மை வேண்டினார்.

இமாசலத்துக்கு அருகே தவச்சாலை அமைத்துக் கொடுத்தான் பர்வதராஜன். பார்வதிக்குக் காவலாகக் கன்னியர் பலர் நியமிக்கப்பட்டனர். 'சிவ சிவ' என்று மனம் மொழி மெய்களால் குழந்தை வழிபாடு செய்து கொண்டிருந்தது.

அம்பாள் செய்த சிவபூஜையைவிட புனிதமான பூஜை எது உண்டு? மணியோடு இணைய ஒளி செய்த தவம் அது. மலரோடு இணைய மணம் செய்த தவம் அது.

ஞானிகள் தமக்காக என்று எதுவுமே செய்ய இயலாது. தமக்கேபோல் அவர்கள் செய்யும் காரியங்களும்கூட உலக சேமத்துக்காகத் தான் அமையும். தேவி செய்த தவம் ஐயனை அடைந்து மணம் புரிந்து கொள்ள வேண்டும்என்ற சுயநலநோக்கத்தோடு முடிவதல்ல. அவர் ஐயனை அடைந்தே தீர வேண்டும். அதனால் நம் காவிய நாயகராம் ஆறுமுகஸ்வாமி அவதரித்தேயாக வேண்டும்! அசுரரை மாய்த்து அமரர் குறைதீர்த்து அறத்தை நிலைநாட்டக் குமரன் தோன்றியே ஆக வேண்டும் என்ற சூழ்நிலை தேவி தவம் புரியும் அதே தருணத்தில் ஏற்பட்டது.

பார்வதி தேவி தவம் செய்து கொண்டிருந்த போது அசுரர் தலைவன் சூரபன்மன் ஆயிரத்தெட்டு அண்டங்களிலும் நூற்றெட்டு யுகங்களாக அரசு செலுத்தி ஒப்பாரும் மிக்காருமின்றிச் செருக்குற்றிருந்தான். அசுரன் ஆட்சியில் தவசிரேஷ்டர்களின் உள்ளம் அமைதியின்றித் தவித்தது.

எம்பெருமான் ஞானமே வடிவானவர். இன்பமும் துன்பமும் ஞானிக்கு இல்லை. என்றைக்கும் ஒன்றுபோல் இருப்பவர் பரமேசுவரர். அவர் கைலாய மலையில் கல்லால விருட்சத்தின் கீழ்த் தென்முகம் நோக்கி பரம சாந்தமாக அமர்ந்திருந்தார்.

(சிவாலயங்களில் சிவலிங்கம் பல திசைகளை நோக்கியிருக்கும். ஆனால் திசை காட்டும் கருவி போல் தட்சிணாமூர்த்தி எல்லாக் கோயில்களிலும் தெற்கு நோக்கித்தானிருப்பார்.)

வடக்கு நோக்கிச் செல்வது சரண யாத்திரை. தெற்கு நோக்கிப் போவது மரண யாத்திரை. 'வடக்கு நோக்கிப் போகாதவர்களே! நீங்கள் என்னிடம் வந்தால் நான் உங்களை நோக்கி வருவேன்'' என்று தெற்கு நோக்கியிருக்கும் தட்சிணாமூர்த்தி சொல்லாமல் சொல்லுகிறார்.

பிரம்மனுக்கு சனகர், சனந்தனர், சநாதனர், சனத்குமாரர் என்று நான்கு புத்திரர்கள். சனகாதி முனிவர்கள் என்று இவர்களைச் சிறப்பித்துச் சொல்வதுண்டு. பிரம்மபுத்திரர் நால்வரும் வேதங்களைக் கற்றுக் கரை கண்டவர்கள். எனினும் இவர்கள் விரும்பிய சாந்தியை கல்வியினால்அடைய முடியவில்லை. பலவிடங்களுக்கும் சென்றார்கள். எங்கும் மன அமைதி கிடைக்கவில்லை. கடைசியாகக் கயிலைமலையை அடைந்தார்கள். முதல் வாயிலையடைந்ததும், நந்தியெம் பெருமானை வணங்கி, அவர் அநுமதியுடன் சிவசந்நிதியுட் சென்றனர். பிரம்மன் முதலியோர் காணாத ஞான நாயகனை சனகாதியர் நால்வரும் கண்டனர்.

மொழியது தவறல் செல்ல முற்றுடல் பொடிப்புக் கொள்ள
விழிபுனல் பெருகத் தீசேர் மெழுகென உள்ளம் விள்ள
அழகிய மறைக்கும் எட்டா ஆதிநா யகனை நோக்கித்
தொழுதனர் உவகை பூத்துத் துள்ளினர் துளக்கம் உற்றார்.

மிகவும் பெரிய ஒருவரிடம் எதையாவது சொல்லுவதற்கு என்று போவோம். ஆனால் அந்தப் பெரியவரைக் கண்டதும், எதைச் சொல்லப்போனோமோ அதைச் சொல்ல முடியாமல் மொழி தடுமாறும். அதுபோலப் பரமேசுவரைக் கண்டதும் சனகாதி முனிவர்களுக்கு மொழி குழறியதாம். மயிர்க்கூச்சம் ஏற்பட்டதாம். தாரை தாரையாக கண்ணீர் விட்டார்களாம். அனலிடைப்பட்ட மெழுகு போல் அவர்கள் உள்ளம் குழைந்து விட்டதாம்.; சரீரம் துள்ளுகிறதாம். 'ஹர ஹர' என்று எம்பெருமானைத் தொழுது, 'வானோர்க்கரிய மருந்தே போற்றி, ஏனோர்க்கெளியஇறைவா போற்றி' என்று துதித்தனர்.

சுவாமிக்குக் கருணை பிறந்தது. 'குழந்தைகளே! வாருங்கள்! உங்களுக்கு என்ன வேண்டும்' என்று மோகனக் குரலில் கேட்டார்.

''பெருமானே! கார்த்திகை மாதம், பிரயாணிகள் கப்பலில் செல்கிறார்கள். அமாவாசையும் நிகழ்கிறது. நடுநிசி, புயல் வீசத் தொடங்குகிறது. அப்போது கப்பலில் உள்ளவர்கள் எப்படித் தவிப்பாரோ, அப்படி அமைதியின்றித் தவிக்கிறது எங்கள் மனம்.

''அருட்பெருங்கடலே! வேதங்கள், ஆகமங்கள், இதிகாசங்கள் எல்லாவற்றையும் நாங்கள் படிக்கப் படிக்க எங்களுக்கு அதிகமாகச் சந்தேகம் எழுகின்றதேயன்றிச் சாந்தி கிடைக்கவில்லை. எங்கள் மயக்கத்தைப் போக்கி மனம் அமைதியடையும் வழி காட்ட வேண்டும்'' என்று பிரம்ம புத்திரர் நால்வரும் தொழுது வேண்டினர்.

பரமேசுவர் புன்சிரிப்புச் சிரித்தார். நந்தியெம் பெருமானை அழைத்து, யார் வந்தாலும் உள்ளே விடவேண்டாம்'' என்று கட்டளையிட்டார்.

சனகாதி முனிவர்கட்குச் சிவாகமங்களின் நுட்பங்களாகிய சரியை, கிரியை, யோகம் என்ற முப்பதங்களையும் கூறினார் சுவாமி. ''ஐயனே! எங்கள் மனம் ஒடுங்க ஞானபாதம் போதிக்க வேண்டும்'' என்று சனகாதி முனிவர்கள் வேண்டினர். 'குழந்தைகளே! அதை வாக்கினால் போதிக்க முடியாது; இப்படிச் சும்மாயிருப்பதே அதுவாகும்'' என்று தம் திருமார்பில் திருவிரலால் அமைத்த சின்முத்திரையைத் தாங்கி யோகத்தில் அமர்ந்து மௌன நிலையைக் காட்டியருளினார் தட்சிணாமூர்த்தி.

(தொடரும்)

# இறையுணர்வாளர்கள்

டி.வி. வெங்கட்டராமன் ஐ.ஏ.எஸ்

திருக்கூத்துக் கண்ட அடியார்கள் தவத்தினால், யோகத்தினால், அறிவால், எல்லையில்லாத அன்பினால் உயர்ந்த நிலையை அடைந்த பிறகு விவரிக்கவொண்ணாத ஒரு அனுபவத்தினைப் பெற்று வாழ்வார்கள். அந்த அனுபவத்திலேயே மூழ்கி வாழும் இறை உணர்வாளர்களுடைய மன நிலையை விளக்குவது கடினமாகும். இவர்கள் புறத்தோற்றத்தில் மற்றவர்களைப் போலவே இருந்தாலும் அகத்திலே ஏற்பட்ட அனுபவத்தால் திரையற்ற நீர்போல் சிந்தை தெளிந்தவர்கள். படிப்பினால் மட்டும் அறிவினை வளர்த்து தத்துவங்களிலே மூழ்கியவர்களாக ஆன்மீகத்தை ஏட்டளவில் புரிந்து கொண்டு அதைப் பேசிப் பேசி பிறரை மயக்குபவர்கள் அல்ல. அவர்கள் பேரறிவு பெற்றவர்கள். ஜீவன் முத்தர்கள். இவ்வுலகிலும் இறையுணர்வோடு கலந்து வாழ்பவர்கள். அன்பும் கருணையும் அவர்கள் உள்ளங்களில் ஆற்று வெள்ளம் போல் பெருக்கெடுத்து ஓடும். சித்து அசித்து, உண்மை இன்மை, அறிவு அறியாமை, இன்பம் துன்பம் இவற்றிற்கான வேறுபாடுகளை நன்கு உணர்ந்து, உள் தெளிந்து திருவடியே தஞ்சமாகி, பிறப்பையும் இறப்பையும் வளர்க்கும் மும்மலங்களின் ஆட்டங்களில் இருந்து விடுபட்டு என்றும் தங்கள் மனதிலும் உணர்விலும் இறைவனுடன் கலந்து தான் நான் என்கிற நினைவும் மறந்தவர்களாக வாழ்வார்கள். இவர்களைத் திருமூலர் ''சித்தர் சிவலோகம் இங்கே தரிசித்தோர்'' என்று அழைக்கின்றார். முதன்மைக் கடவுளுடைய விளக்கம் நாதம். அந்த நாதத்தின் முடிவை தம்முள் உணர்ந்து குற்றமற்ற தூய்மையான இன்பத்தில் எல்லா தத்துவங்களுக்கும் அப்பாற்பட்ட நிலையில் இறையுணர்வாளர்கள் பேரின்பத்தில் திளைத்தவர்களாக, மக்கள் அனைவருக்கும் அவ்வின்பத்தை பகிர்ந்தளிக்க வல்லவர்கள்.

''சித்தர் சிவலோகம் இங்கே தரிசித்தோர்
சத்தமுஞ் சத்த முடிவுந்தம் முள்கொண்டோர்
நித்தர் நின்மலர் நிராமயர் நீள்பர
முத்தர்தம் முத்தி முதல் முப்பத்தாறே''.

2. ஐம்புலன்கள் உயிருக்கு அனுபவங்களை சேர்த்துக் கொண்டே இருக்கின்றன. அவற்றால் மக்கள் பெறுவது சிற்றறிவு ஆகும். அந்த சிற்றறிவை 'ஆமேவு பால் நீர் பிரிக்கின்ற அன்னம் போல்' பேரறிவில் இருந்து பிறவிக்குக் காரணமான கன்ம நிலையில் இருந்து விடுவித்துக்கொண்டு தவயோகத்தில் புக்கு தன்னொளி பெற்று இறைவன் உலகெங்கும் தானான உண்மை நிலையினை இறை உணர்வாளர்கள் தங்களுடைய பெரு வெளியிலேயே உணர்ந்தவராவார்கள். அதே நேரத்தில் வாழ்வையும் வாழ்வதன் அனுபவத்தையும் அவர்கள் தள்ளிவிடுவதில்லை. அவற்றையே இறைவனின் தன்மையை வெளிக்காட்டும் ஏணிகளாக மாற்றி அந்த ஏணிகளில் படிப்படியாக ஏறி, ஒப்பில்லாத ஆனந்தத்தைப் பெற்று விவரிக்க இயலாத இறைவனையும் தம்முள் கண்டு வாழ்கின்றார்கள். அந்தத் திருமந்திரத்தைப் பாருங்கள்.

''முப்பதும் ஆறும் படிமுத்தி ஏணியாய்
ஒப்பில்லா ஆனந்தத் துள்ளொளி புக்குச்
செப்ப அரிய சிவங்கண்டு தெளிந்தப்
பரிசாக அமர்ந்திருந்தாரே''

3. இறையனுபவம் அவர்கள் உள்ளத்தில் பரவி நிற்பதாலும் பரம்பொருள் எங்கும் நிறைந்திருப்பதாலும் இறையுணர்வாளர்களுடைய மன நிலை' எல்லையற்ற கடல் போல விரிந்து நிற்கும். எல்லாம் இறைவன் செயல் என்பதை எப்பொழுதும் மனதில் கொண்டிருப்பர். காலத்திற்கு அப்பாற்பட்ட இறைவனுடன் அவர்கள் கலந்து இருப்பதால் அவர்கள் முக்காலத்தின் இயல்பையும் நன்கு உணர்ந்தவர்களாகின்றனர். இந்த நிலையில் இருக்கும் இறையுணர்வாளர்களின் தன்மையை ''இழவு வந்து எய்திய சோம்பே'' என்கிறார் திருமூலர். தன்நினைவு இழந்த நிலை இழவாகும். சோம்பல் என்பது பந்தபாசங்களை விலக்கி மனத்தை ஒடுக்கி இறைவனுடன் முழுவதும் கலந்த நிலையாகும். இதுபற்றிய திருமந்திரம் பின் வருமாறு:

''இருந்தார் சிவமாகி எங்குந் தாமாகி
இருந்தார் சிவன்செயல் யாவையும் நோக்கி
இருந்தார் முக்காலத் தியல்பைக் குறித்தங்
கிருந்தார் இழவுவந் தெய்திய சோம்பே''.

இறையுணர்வாளர்கள் தங்கள் வாழ்நாள் முழுவதும் தங்களுடைய மனவெளியிலே இறைவனுடைய எண்ணம் கலந்தவர்களாக தூய்மை உள்ளம் கொண்டவர்களாக வாழ்வர். ஐம்புலன்களால் தூண்டப்படும் உணர்ச்சிகள் அவர்களை அணுகா. தான் என்கின்ற ஆணவ மனப்பான்மை அவர்களிடம் இருந்து ஓடி மறைந்துவிடும். மனதில் எழும்பும் பலவகையான எண்ண அலைகள் படிப்படியாக குறைந்து முழுமுதற் கடவுளின் தன்மையாகிய ஒலியையும், ஒளியையும் தம்முள் சதா அனுபவித்துக் கொண்டிருப்பார்கள். இந்த நிலையை

திருமந்திரம் தூக்கம் என்று அழைக்கின்றது. தூக்கம் என்பது வெறும் கண் உறங்குதல் மட்டுமல்ல. உறங்குதல் உடலைப்பற்றியது. உறங்கும் பொழுது உடலைப் பற்றிய கருவிகள் ஓய்வு பெறும். ஆனால் இறையுணர்வாளர்கள் அடையும் நிலை மனமும் மற்ற எல்லாக் கருவிகளும் ஒடுங்கி, சித்தம் உறங்கி இறைவனின் உணர்வு மட்டும் இதயத்தில் தங்குகிறது. இந்த நிலையைத் தாயுமானவர் ''தூங்காத தூக்கமது தூக்கம் பராபரமே'' என்று அழகாக வருணிக்கிறார். மனமும் சித்தமும் மற்ற அந்த கரணங்களும் ஒடுங்குவதாலேயே இறையுணர்வாளர்கள் என்றும் ஒப்பற்ற யோக நிலையில்தங்கிப் பேரின்பத்தை அடைகிறார்கள்.

''தூங்கிக்கண் டார்சிவ லோகமும் தம்உள்ளே
தூங்கிக் கண்டார்சிவ யோகமும் தம் உள்ளே
தூங்கிக் கண்டார்சிவ போகமும் தம்உள்ளே
தூங்கிக்கண்டார்நிலை சொல்வ தெவ்வாறே''

4. திருமூலர் அத்தகைய நிலையைப் பெற்றிருந்தார் என்பது பல மந்திரங்களில் தெளிவாக விளக்கப்பட்டுள்ளது. இறையறிவு, இறையாற்றலும் சேர்ந்து திருக்கூத்து நடைபெறும் இடமாக அவருடைய உள்ளம் அமைகின்றது. இதையே பொதுமன்றம் என்று சித்தர் வழங்குவர். தம்முள் இந்த ஒலி, ஒளி அசைவுகளை இறையுணர்வாளர்கள் அனுபவிக்கும் பொழுது பல வண்ணங்களின் எழில்களாக தரிசிக்கின்றனர். அவற்றைத் தரிசித்து தொழுது பெரும் பேறு, எத்தகையது என வெறும் சொற்களால் விவரிக்க இயலாது.

''மாணிக்கத் துள்ளே மரகதச் சோதியாய்
மாணிக்கத் துள்ளே மரகத மாடமாய்
ஆணிப்பொன் மன்றில் ஆடுந் திருக்கூத்தைப்
பேணித் தொழுதென்ன பேறு பெற்றாரே''

இறையுணவாளர்கள் சமயக் கோட்பாடுகளுக்கு அப்பாலும் அவற்றின் உள்ளும் புறமும் இருக்கக்கூடியவற்றை ஆராய்ந்து பார்க்கக்கூடிய ஆன்மீக வலிமையை தங்கள் தவத்தால் யோகத்தால், அறத்தினால், அன்பினாலும் பெறுகின்றார்கள். அந்த வலிமையைப் பெற்றவர்கள் உண்மையை நோக்குகிறார்கள். உண்மையின் கருத்தினை தம்முள் உணர்கின்றார்கள். உணர்ந்த பிறகு மாறுபட்டவர்களாகி அந்த உண்மையைப் பிறருக்கு எடுத்துக் கூறுகின்றார்கள்.

5. இறையுணர்வாளர்கள் அடையும் நிலை பாசத்தைக் கடந்த நிலை யாகும்; மனம் வாக்குக் காயத்தால் மூளும் வல்வினையைக் கடந்த நிலை யாகும். எல்லாம் தெரியும் அறிவுதனை அறிந்த பிறகு இவர்கள் தங்களுடைய சாதனையைப் பற்றி பேசிப் பிதற்றிக் கொண்டிருப்பதில்லை. பிறவிப்பயன் முழுவதையும் பெற்றடைந்து தான் பெற்ற பேரறிவின் காரணமாக எஞ்சி நிற்கும் கன்மங்களையெல்லாம் எடுத்துவிட்டு, மேல்வரும் வல்வினை தங்களை நெருங்காத வண்ணம் தூய வாழ்வினை மேற்கொண்டவர்களாக இறையருள் எப்பொழுதும் தங்கள் சிந்தையிலே விளங்கும் நிலைபெற்றவர்களாக இவர்கள் வாழ்கின்றார்கள்.

## வாசகர் எண்ணங்கள்

தி. இராச. கல்யாணசுந்தரம் ஐ.ஏ.எஸ். அவர்களின் திருப்பாணாழ்வார் கட்டுரை 'சமத்துவ சமுதாயம்' சாதிமதபேதமற்ற முறையில் அமைய வேண்டும் என்பதை வலியுறுத்துவதாக இருந்தது. சமுதாயத்தைக் சாதி சாதியாக முன்னேற்ற முடியாது என்ற கருத்து வரவேற்பிற்குரியது.

—இரா. மணவாளதாசன், திருவல்லிக்கேணி

''திருப்பாணாழ்வார்'' சரிதம் தேவாமிர்தமாக இனித்தது. நாளுக்கு நாள் திருக்கோயில் இதழ் பொலிவு பெற்று மலர்கிறது. ஆர்வமிக்க ஆணையருக்கும், ஆசிரியருக்கும் பாராட்டுக்கள்.

—தி.சடகோபன், திருநீர்மலை.

ம.சூரியராஜ் பி.ஏ.பி.எல். அவர்களின் ''வாழ்வெனும் சூழல்'' பல முறையும் படித்து மிகுந்த சந்தோசம் அடைந்தேன். முழுநம்பிக்கையுடன் கூடிய இறைவழிபாட்டின் அவசியத்தைத் தெளிவாவாக விளக்கியது இக்கட்டுரை.

—எ.நெல்லையப்பன், மேட்டுப்பாளையம்.

அருட்செல்வி அவர்களின் ''திருநீறு தந்த கைமேல் பலன்'' படக்கதை பார்த்துப் பரவசம் அடைந்தேன். திங்கள் ஒரு படக் கதை தவறாமல் வெளியிடுங்கள்.

—இரா. கணேசன், ஈரோடு-6

'குமரனால் அம்மா என அழைக்கப்பட்ட சிவகாமித் தாயார் சரிதம்' சிறப்பாக இருந்தது. தெ.சிவகுரு பாண்டியன் சுவைகுன்றாத நடையில் கதையைக் கூறிய பாங்கு பாராட்டத்தக்கது.

—நமச்சிவாயம் பி.காம்.பி.எல்.
சென்னை-600002

அப்பேர்ப்பட்டவர்களை தன்னை அறிந்திடும் தத்துவ ஞானிகள் என்று திருமூலர் அழைக்கின்றார். இறைவனுடைய அருளும் அவர்களுடைய ஆற்றலும் பின்னி நிற்கும் நிலையாகும். இந்த நிலையைத் திருமந்திரம் பின்வருமாறு விளக்குகின்றது.

''தன்னை யறிந்திடும் தத்துவ ஞானிகள்
முன்னை வினையில் முடிச்சை யவிழ்ப்பர்கள்
பின்னை வினையைப் பிடித்துப் பிசைவர்கள்
சென்னியில் வைத்த சிவனருளாலே''.

6. இது மௌனத்தில் ஒடுங்கும் நிலையாகும். தம்முள் இருக்கும் சக்தியை அறிந்தவர்களுக்கு மலமில்லை மாசில்லை, மான அவமானமில்லை, குலமில்லை உயிர்களுடன் பற்றி நிற்கும் குணவிசேசங்களும் இல்லை, நலனில்லை, கேடில்லை, பிரம்மன் போன்ற கோடிக்கணக்கான தேவர்கள் கூட பாசத்தால் கட்டப்பட்ட நிலையும் இல்லை. இறையுணர்வாளர்கள் நிலை கடவுள் நிலையாகும். இறைவனுடன் பொருந்திய பிறகு கிடைக்கக்கூடிய நிலை இது. இந்த நிலையில் இருந்த திருமூலர்

''ஒழிந்தேன் பிறவி யுறவென்னும்* பாசங்
கழிந்தேன் கடவுளும் நானுமொன்றானேன்
அழிந்தாங் கினிவரு மாக்கமும் வேண்டேன்
செழுஞ்சார்புடைய சிவனைக் கண்டேனே''

என்கின்றார்.

மக்கள் அன்றாட வாழ்வில் உலகத்தோடு இணைந்து வாழ முற்படுகின்றார்கள். அவ்வழியாக இன்பமடையப் பார்க்கின்றார்கள். இதில் வியப்பொன்றில்லை. பிறந்த பிறகு சமூகத்தினருடன் ஒத்து வாழ்தல் மூலமாக கிடைக்கக்கூடிய லௌகீக பயன்களை பெற்றுத் தீர்வதற்கே சீவன் முற்படுகின்றது. அவ்வாறு இல்லாவிடில் பிறப்பின் நோக்கம் நிறைவேறாது. ஆனால் அந்த நிலையில் என்றுமே இன்பத்தைத் தொடர்ந்து பெற்றிருக்க முடியாது. இன்பமும் துன்பமும் மாறி வந்து கொண்டேயிருக்கும். அதை அறிந்துகூட மக்கள்''இச்சையுளே வைப்பர்''. சற்று சிந்தித்துப் பார்க்கும்பொழுது இவையெல்லாம் தேவையற்றது என்று புரிந்து கொள்ள முடிந்தாலும் வலுவான பாசத்தால் கட்டுப்பட்ட மக்கள் நிலையான பேரின்பத்தைப் பெற இயலுவதில்லை. ஆனால் ஒரு நாள் உண்மையை எல்லா சீவன்களும் உயர்வதற்கான வழியினை இறைவன் நமக்குக் காட்டுகின்றான். அருளினால் நமக்கு அந்த நேரம் கிட்டும் பொழுது இனி உலக அனுபவங்கள் தேவையில்லை என்கின்ற முடிவு தோன்றுகின்றது. மனக் சேட்டைகள் அடங்குகின்றன. பிறவித் துயரைக் கொடுக்கும் அறிவு மாறி, அகத்தில் பேரொளி புலப்படத் தொடங்குகின்றது. வாழ்க்கையின் உண்மையான நோக்கம் அகக்கண்களுக்கு விளங்கத் துவங்குகிறது. நிலையான நெறி ஒன்றினை மனம் பற்றிய பிறகு அதனால் ஏற்படும் பெரும் பேற்றினை மனம் அடைகின்றது. இந்தச்சாதனையைச் செய்த இறையுணர்வாளர்கள் உலகுடன் பேசாப் பெருமையைப் பெறுவர். திருமந்திரம் இதைப் பின்வருமாறு விளக்குகிறது.

''பெற்றார் உலகிற் பிரியாப் பெருநெறி
பெற்றார் உலகிற் பிறவாப் பெரும்பயன்
பெற்றார் அம்மன்றிற் பிரியாப் பெரும் பேறு
பெற்றார் உலகுடன் பேசாப் பெருமையே''

7. இத்தகைய பேறு பெற்ற இறையுணர்வாளர்கள் ஜீவன் முத்தர்கள் என்று அழைக்கப்படுகிறார்கள். இந்தப் பிறப்பிலேயே அவர்கள் பிறவாப்பயனைப் பெற்ற பின்னர் மற்ற உயிர்களை மற்ற இதயங்களை புறக்கணித்துவிட்டு வெறுமனே தங்களுடைய வாழ்நாட்களைக் கழிப்பதில்லை. எங்கும் நிறைந்து அங்குமிருக்கும் நெடுஞ்சுடரை தம்முள் தானும் இறையுணர்வாளர்கள் பிறருடைய உள்ளங்களிலும் காண்கின்றார்கள். வேற்றுமை என்னும் மாயைத்திரை அகன்ற பின்னர் தம்முள் எல்லா சீவ ராசிகளையும் எல்லா சீவ ராசிகளிலும் தம்மையும் காண்கின்றார்கள். உயிர்களிடத்து அன்பும், கருணையும், பாசமும், பரிவும் உருக்கமும், தயவும் தோன்றுகின்றன. மக்களிடம் இருந்து ஒதுங்கி விடாது அறம் செய், அன்பு கொண்டவனாய் இரு, அன்பு செய்வாரை சிவன் அறிவன் என்றெல்லாம் திருமூலர் திருமந்திரத்தில் அழகாக போதிக்கின்றார். நாட்கள் கழிந்து கொண்டே போகின்றன. யாக்கை நிலைப்பதில்லை. அறம் செய்வதன் மூலம் இறைவனையடைய கழலடியைக் காணலாம் என்பது இறையுணர்வாளர்களுடைய துணிபு. பிறரிடம் அன்பு செலுத்துவதன் மூலம் இறைவனை அடையலாம் என்பதும் அவர்களுடைய கொள்கையாகும். அன்பு கொண்ட இதயம் இறைவனை அடைகின்றது; எல்லா உயிர்களிடமும் அன்பினைச் செலுத்தினாலே போதுமானது என்பதும் இறையுணர்வாளர்கள் கண்ட உண்மையாகும்.

8. திருமூல நாயனார் ஒரு ஒப்பற்ற இறையுணர்வாளராக திகழ்கின்றார். அவர் அருளிச் செய்த திருமந்திரம் இறையுணர்வாளர்கள் மன நிலையை தெளிவாக விளக்குவதன் மூலம், அவர்கள் புரிந்த சாதனையை நாம் எல்லோரும் புரியத் தகுதி பெற்றவர்கள் என்பதையும் சிறப்பான முறையில் எடுத்துக் கூறுகின்றது.

நன்றி : 'வாழும் தமிழ் உலகம்

# வினாவும்



# விடையும்

சீடன்: சுவாமி, நாம் தெய்வங்களுக்கு அபிசேகம் முதலான பூஜைகள் செய்வது ஏன்?

குரு: ஞானத்தை உண்டாக்கக்கூடிய சாதனம் பூஜையாகும். அருட்சக்தி குளிர்ந்தால் அதனுள் அடங்கிய அண்டமும் குளிரும். அதன் பயனாக உயிர்ப்பொருட்கள் அனைத்தும் தழைத்துச் செழிக்கும் என்பதை விளக்குவதே அபிசேகத் தத்துவமாகும். நான் எனும் அகந்தையைப் பொசுக்குவதற்காக தூபமும், அஞ்ஞான இருளைப் போக்கி ஞான ஒளியைப் பெறுவதற்காகத் தீபமும், ஆத்ம குணங்களாகிய, அகங்காரம், சங்கற்பம், குரோதம் முதலானவற்றை ஆண்டவனுக்கு அமுதமாகச் சமர்ப்பித்துநாம் தூய்மை பெறுவதற்காக நைவேத்தியமும் படைக்கப்படுகின்றது.

முருகித் துதித்துப் பின் பல்லக்கில் ஏறி வாத்திகள் முழங்க, விருதுகள் சூழக் கிளம்பினார். கு செல்கிறார்?

''வெம்பிறவி வேலைதனில் வீழ்பவர்கள்
எல்லாம்
நம்பு சிவ நாமம் எனும் நற்புணை பிடித்தால்
எம்பரன் அருட்கரையில் ஏறு துறையாமால்
அம்புவி மொழிந்துள பெருந்துறை அதன்
பேர்''

பிறவிப் பெருங்கடலில் வீழ்ந்தவர்கள் சிவ நாமம் என்னும் மரக்கலத்தின் உதவியால் சிவபெருமான் அருளாகிய கரையில் ஏறுவதற்கு சிறந்தத் துறை என்று சிறப்பிக்கப்படும் திருப்பெருந்துறை எனப்படும் தலத்தை நோக்கிப்புறப்பட்டார் என்று பரஞ்சோதி முனிவர் திருவிளையாடற் புராணத்தில் எடுத்துரைக்கிறார்.

அங்கு இவர் போய்ச்சேருமுன், திருவாதவூராரை ஆட்கொள்ள எண்ணிய சிவபெருமான், ஒரு வயது முதிர்ந்த அந்தணர் வடிவம் ஏற்று, அழகான சோலையில் ஒரு குருந்த மரத்தின் அடியில் குருமூர்த்தியாக வீற்றிருந்தார். அவரைச் சுற்றிலும் கணநாதர்கள் சிஷ்யர்களாக வீற்றிருந்து வேதம் ஓதிக்கொண்டிருந்தனர். அவருடைய சக்தியானது, காந்தம் இரும்பை இழுப்பது போல அழைத்துச்செல்ல, சிவகுருவின் பாதத்தில் அடியற்ற மரம் போல் வீழ்ந்தார் திருவாதவூரர். பரம்பொருளாகிய தட்சிணாமூர்த்தியிடமே அருளுபதேசம் பெறும் பேற்றினையடைந்தார் திருவாதவூரர். குற்றமில்லாத மாணிக்கக் கற்களால் ஆன மாலையைப்போல் இவர் வாயிலிருந்து, பழுதில்லாத மணிமணியான சொற்களால் ஆன பாமாலை எழுந்தது. அதுவே ''நமச்சிவாய வாழ்க நாதன் தாள் வாழ்க'' எனத்தொடங்கும் சிவபுராணம். இந்த சிவபுராணத்தைச் ''சொல்லிய பாட்டின் பொருள் உணர்ந்து சொல்லுவர் செல்வர் சிவபுரத்தின் உள்ளார் சிவனடிக்கீழ் பல்லோரும் ஏத்தப் பணிந்து'' என்று சொல்கிறார். இந்த சிவபுராணத்தைக் கேட்டு மகிழ்ந்த இறைவன், இவருக்கு '' மாணிக்கவாசகர் '' என்ற அருமையான பட்டத்தைச் சூட்டினார்.

''பழுதிலாத சொல் மணியினை பக்தி செய்து
அன்பு
முழுதுமாகிய வடத்தினால் முறை தொடுத்த
அலங்கல்
அழுது சாத்தும் மெய் அன்பருக்கு அக
மகிழ்ந்து ஐயர்
வழுவிலாத பேர் மாணிக்கவாசகர் என்றார்''

மாணிக்கவாசகர் '' தன்னை மறந்தாள் தன் நாமம் கெட்டாள்'' என்னும்படி, தான் மந்திரி என்பதை மறந்தார். ராஜ உடையைக் களைந்து வெள்ளை ஆடை உடுத்தி ருத்ராட்ச மாலையைத் தரித்தார். வந்த வேலையை மறந்தார். இறைவன் தந்த செல்வத்தை இறைவனுக்காகவே அர்ப்பணித்தார். உடன்வந்தவர்கள் மனம் கலங்கினார்கள். அரசனிடம் நடந்த விஷயத்தைத் தெரியப்படுத்தினர். மன்னன் சினம் கொண்டு மாணிக்கவாசகருக்குக் கடிதம் எழுதினார். இறைவனோ ''ஆவணி மூலத்தன்று குதிரைகள் வரும்'' என்ற அருள் வாக்கினை மாணிக்கவாசகருக்கு நல்கி, அவரை மதுரைக்கு அனுப்பி வைத்தார். ஆனால், பொறுமை இழந்த மன்னன், திரியைச் சிறையிலடைத்து துன்புறுத்தினார்.



**இக்கட்டுரையாளர் பற்றி**

**63 நாயன்மார்களின் வரலாறுகளையும் இவர் இன்னிசையாக்கி வழங்குகிறார்.**

**தருமபுரம் ஆதீனம் இவரைச் சிறப்பித்துப் பாராட்டியுள்ளது.**

**புரசை அருள்நெறிக் கழகம் "பிரசங்க பூசணம்" எனும் பட்டம் வழங்கியுள்ளது**

இறைவன் மாணிக்கவாசகர் பெருமையை உலகு உணர வேண்டி சில திருவிளையாடல்களைப் புரிந்தார். காட்டிலுள்ள நரிகளையெல்லாம் பரிகளாக்கி, தானும் வேதப்பரி ஏறும் சேவகனாக சொன்னபடி ஆவணி மூலத்தன்று வந்தார். ஆனாலும், பரிகளை பழையபடி நரிகளாக மாற்றி அரசன் ஆணவத்தை உடனே அழித்தார். மேலும் வைகையில்வெள்ளப்பெடுருக்கெடுத்துஓடச்செய்து, வந்தியின் பிட்டை வாங்கி உண்டு, அரசனால் பிரம்படி பட்டு, தான் பட்ட அடி உலகனைத்தும், மற்றும் அண்ட சராசரங்களும் ஏற்குமாறு செய்து மாணிக்கவாசகர் பெருமையை மன்னனுக்கும் மற்றவருக்கும் உணர்த்தினார். இந்த அற்புதங்களை மாணிக்கவாசகர்,

''நரியைக் குதிரைப் பரியாக்கி ஞாலமெல்
லாம் நிகழ்வித்துப்
பெரியதென்னன் மதுரையெல்லாம் பிச்சதேற்
றும் பெருந்துறையாய்



அரியபொருளே அவிநாசியப்பா பாண்டி
வெள்ளமே
தெரியவரிய பரஞ்சோதி செய்வதொன்றும்
அறியேனே ''

என்று ''ஆனந்த மாலை'' யிலும்,

''பண் சுமந்த பாடற் பரிசுபடைத்தருளும்
பெண்சுமந்த பாகத்தன் பெம்மான்
பெருந்துறையான்
விண் சுமந்த கீர்த்தி வியன் மண்டலத்தீசன்
கண் சுமந்த நெற்றிக் கடவுள் கலிமதுரை
மண்சுமந்து கலிகொண்டு அக்கோவால்
மொத்துண்டு
புண் சுமந்த பொன்மேனி பாடுதும் காண்
அம்மானாய்''

என்று ''திருவம்மானை''யிலும் உணர்த்தியுள்ளார்.

பிறவியிலேயே ஊமையாய் இருந்த இலங்கை அரசன் மகளைப் ''பூசுவதும் வெண்ணீறு'' என்ற திருச்சாழல் பதிகத்தினால் பேசும்படிச் செய்தார் மாணிக்கவாசகர். இன்றும் இந்த ''திருச்சாழல்'' பதிகத்தை நம்பிக்கையுடன் படிப்போர் பேசும் அருள் பெறுவர் என்பது உறுதி.

இறைவனே நேரில் அந்தண வடிவில் வந்து இவருடையபாடல்களைத் தம்முடைய திருக்கரத்தினால் எழுதி உலகிற்கு அளித்த தேனினும் இனிய திருவாசகப் பாடல்களின் பெருமை அளவிடற்கரியது. இதன் மையமாகத் திகழ்வது இருபது பாடல்களைக் கொண்ட திருவெம்பாவை. இதில் இறைவனின் பஞ்சகிருத்தியங்களையும் விளக்கும் பாடல் வருமாறு:

''போற்றி அருளுக நின் ஆதியாம் பாதமலர்
போற்றி அருளுக நின் அந்தமாம்
செந்தளிர்கள்
போற்றி எல்லா உயிர்க்கும் தோற்றமாம்
பொற்பாதம்
போற்றி எல்லா உயிர்க்கும் போகமாம்
பூங்கழல்கள்
போற்றி எல்லா உயிர்க்கும் ஈறாம்
இணையடிகள்
போற்றி மால் நான்முகனும் காணாத
புண்டரிகம்.
போற்றி யாம் உய்ய ஆட்கொண்டருளும்
பொனமலர்கள்
போற்றி யாம் மார்கழி நீர் ஆடேலோர்
எம்பாவாய்''.

இப்படி ''என்பு நைந்துருகி நெக்கு நெக்கேங்கி, அன்பெனும் ஆறு கரையது புரள, நற்புலன் ஒன்றி நாதா என்று அரற்றி, உரை தடுமாறி, உரோமம் சிலிர்ப்ப கரமலர் மொட்டித்து இருதயம் மலர கண்களி கூர நுண்துளி அரும்ப சாயா அன்பினை நாள் தொறும் தழைப்பவர், தாயே ஆகி வளர்த்தனைப் போற்றி'' என்று அன்புடன் அகம் குழைத்து, இறைவனருளைத் திருவாசகப்பாடல்களால் பரப்பிய மாணிக்கவாசகர் ''சித்தமலம், அறுவித்து, சிவமாக்கி எனையாண்ட அத்தனே'' என்று அரற்றிக் கொண்டே தில்லை நடராஜப் பெருமாள் சந்நிதியில் அருட்பெருஞ்சோதியில் கலந்தார்.

'வான் கலந்த மாணிக்கவாசக நின்
வாசகத்தை
நான் கலந்து பாடுங்கால் நற்கருப்பஞ்
சாற்றினிலே
தேன் கலந்து பால் கலந்து செழுங்கனி
தீஞ்சுவை கலந்தென்
ஊன் கலந்து உயிர் கலந்து உவட்டாமல்
இனிப்பதுவே''
—வள்ளலார்.

நம பார்வதி பதயே
ஹர ஹர மஹாதேவா!

# பங்கமில் குணத்தான் பரதன்

புலவர் திலகம் கீரன்

**தந்தையின் பெயரை கூறித் தன்னை அறிமுகப் படுத்திக்கொள்ள முடியாத பிள்ளை யார்?**

ஒருவர் பால் நாம் அளவு கடந்த அன்பு கொள்ளும்போது காரணமின்றியே மற்றொருவர் பால் வெறுப்புக் கொள்கிறோம். அதுவும் நாம் யாரை மிகுதியும் விரும்புகிறோமோ அவருக்கு இன்னார் பகை என்று நாமே கற்பித்துக்கொண்டு, கற்பித்துக் கொண்டவரைக் கடுமையாக வெறுக் கிறோம். யார் பாலும் விருப்பு, வெறுப்பு இன்றி நடுநின்ற உள்ளத்துடன் இருந்தால் எவரையும் புரிந்து கொள்ளும் ஆற்றல் நமக்கு வந்துவிடுகிறது.

கைகேயி, தசரதன், இலக்குவன், கோசலை, வசிட்டன், குகன் ஆகிய அறுவரும் இராமன்பால் அளவுகடந்த அன்புடையவர்கள். அதனால் இரு வரையும் புரிந்து கொண்டனர்.

'எண்ணில் கோடி இராமர் அண்ணல் நின் அருளுக்கு அருகாவாரோ' என்று கோசலையும், 'ஆயிரம் ராமர் நின்கேழ் ஆவாரோ தெரியிலம்மா' என்று குகனும் பரதனைப் பாராட்டுவதெல்லாம், அவனைத் திரிபின்றி உணந்த பிறகே. ஆனால் இராமனாகிய காவிய நாயகன் மீது அவனைச் சுற்றியுள்ளவர் அனைவரும் வைத்த மிகுதியான அன்பு பரதனை வெறுக்க வைத்து, அவனை நம் அனுதாபத்திற்குரிய பாத்திரமாக்கி விடுகிறது.

கைகேயி, தசரதன், இலக்குவன், கோசலை, வசிட்டன், குகன் ஆகிய அறுவரும் இராமன் மீது அதிகமான பற்றும் பாசமும் கொண்டிருந்தனர் என்பது வெளிப்படை.

இவ்வறுவருள் கோசலை இராமன்மீதுபற்றுக் கொண்டது, இயற்கையான பிள்ளைப் பாசத்தின் அடிப்படையில்.

ஆனால் கைகேயி, கோசலைபோலத் தன் மகன் பரதன் மீது இயற்கையான பிள்ளைப் பாசத்தை வைக்கவில்லை. அதற்கு மாறாக இராமனையே தன் பிள்ளையாக-தன்னால் பெற் றெடுக்கப் பெற்ற பிள்ளையாகக் கருதினாள். அங் ஙனம் கருதி அவனை வளர்க்கவும் செய்திருக் கின்றாள்.

கைகேயி ஒவ்வொரு முறையும் இராமனைத் 'தன்சேய்' என்றே அழைக்கின்றாள்.

'தன்பிள்ளை' என்ற பாசத்தில் அவனை வளர்த்தும் வந்திருக்கிறாள். இதனை நகரமாந்தர் கூற்றாகக் கம்பன் ஒரு இடத்தில் குறிப்பிடுகிறான்.

இராமனை, முடிசூடும் செய்தி சொல்ல அழைத்து வருக என்ற தசரதன் கட்டளைப்படித் தேர்ப்பாகன் சுமந்திரன் அழைத்து வரவும், வரும் வீதி வழி நகர மாந்தர் இராமனைப் பல வாறாகப் புகழுகின்றனர். அப்போது ''இவன் தாயின் கையில் வளர்ந்தவன் அல்லன்; இவனை வளர்த்தது கேகயன் மகள் கைகேயி; அதற்கு அவள் தவம் செய்திருக்க வேண்டும்'' என்று கூறிப் பாராட்டுகின்றனர்.

''தாய் கையில் வளர்ந்திலன் வளர்த்தது
தவத்தால் கேகயன் மடந்தை''

என்பது கம்பன் வாக்கு.

இராமனைக் கைகேயி பிள்ளைப் பாசத்தால் தானே வளர்த்தது மட்டுமின்றி எவ்விடத்தும் அவனைத் 'தன் பிள்ளை' என்றே கூறி வந்திருக் கிறாள்.

கூனி, தூங்கும் கைகேயியை எழுப்பி உனக்குத் தலைமேல் ஆபத்து வந்துள்ளது என்று தன் வஞ் சனைப் படலத்தை விவரிக்கத் தொடங்குகிறாள். அப்போதும் கைகேயி ''எனக்கு என்ன ஆபத்து வரும் என்கிறாய்! பாராட்டத்தக்க பிள்ளைகளைப் பெற்றுவிட்ட பெற்றோர்களுக்கு இறுதிக் காலத் தில் எந்தவித துயரமும் வராது. நானோ வேதத் திற்கு நிகரான இராமன் என்ற பிள்ளையைப் பெற்றிருக்கும்போது எனக்கு என்ன தீங்குவரும்?' என்று கேட்கிறாள்.

''பராவரும் புதல்வரைப் பயக்க யாவரும்
உராவரும் துயரைவிட்டு உறுதி காண்பரால்
விராவரும் புவிக்கெலாம் வேதமே அனைய
இராமனைப் பயந்த எற்கு இடருண்டோ
என்றாள்''

இங்கு கைகேயி இராமனைப் 'பயந்த' என்று சொல்வதிலேயே ஆழமான பொருள் அமைந் துள்ளது. தானே வயிற்றில் சுமந்து பெறுவதே 'பயத்தல்' ஆகும்.




மேற்குறித்த கருத்தால் கைகேயி இராமனை தன் மகனாகவே, தான் பயந்து-தான் வளர்த்த மகனாகவே கருதுகிறாள் என்பது விளங்கும். ஆனால் இந்த அளவு பாசத்தைப் பரதனிடம் அவள் காட்டியதற்குச் சான்றில்லை.

இராமனும் கைகேயியையே தன் தாயாக எண்ணி வந்தான் என்பதையும் அறியவேண்டும். கோசலையே தனக்குத் தாய் எனினும், தாய்க்குச் செய்ய வேண்டிய மரியாதைகளைச் செய்ய வேண்டிய காலத்தில் எல்லாம், இராமன் அவற்றை முதலில் கைகேயியிக்குச் செய்த பின்னரே கோசலைக்குச் செய்துள்ளான்.

சீதையைத் திருமணம் செய்துகொண்ட இராமன் தாயர் மூவரையும் வணங்குகின்றான். அவன் முறைப்படி வணங்குவதாயின் முதலில் கோசலையையும், இரண்டாவதாகச் சுமித்திரையையும், மூன்றாவதாகக் கைகேயியையும் வணங்கியிருத்தல் வேண்டும்.

ஆனால் இராமனோ முதலில் கைகேயியையும் பின்னர் தன் அன்னை கோசலையையும், இறுதியாகச் சுமித்திரையையும் வணங்கினான். முதலில் கைகேயியை வணங்கியதோடல்லாமல், தாயை வணங்குவதினும் மிகுந்த அன்புடன் வணங்கினான்.

''கேகயன் மாமகள் கேழ்கிளர் பாதம்
தாயினும் அன்போடு தாழ்ந்து வணங்கா
ஆயதன் அன்னை அடித்துணை ஆடி
தூய சுமித்தரைதாள் தொழலோடும்''

இதனால் கைகேயி இராமனை மகன் என்றும் இராமன் கைகேயியைத் தாய் எனவும் கருதி வந்த பாசம் அறியவரும்.

வசிட்டன் தசரதன் புதல்வர் நால்வருக்கும் சௌனம், உபநயனம், மறை ஓதுவித்தல் ஆகிய கடமைகளை வேறுபாடின்றி செய்தான். எனினும் நால்வருள்ளும் இராமன் பால் தனித்த அன்பு அவனுக்கு இருந்தது. அதற்குக் காரணம்திருமாலே இராமனாக அவதரித்துள்ளான் என்பதைச்சிந்தையில் முன்னரே அறிந்துள்ள பக்தியால் இருக்கலாம். இராமன்பால் தனித்த அன்புகொண்டு ஓதுவித்தல்

என்ற கடமையை மட்டும் செய்யாமல் 'வளர்த்த லும்' செய்தான். இதனை விசுவாமித்திரன் மிதிலை மன்னனுக்குக் குலமுறை வரலாறு சொல்கின்ற காலத்து இராமனைச் சுட்டி,

''திறையோடும் அரசு இறைஞ்சும்
செறி கழற்கால் தசரதனாம்
பொறையோடும் தொடர் மனத்தான்
புதல்வர் எனும் பெயரே காண்
உறை ஓடும் நெடுவலோய்
உபநயன விதி முடித்து
மறை ஓதுவித்து இவரை
வளர்த்தவனும் வசிட்டன் காண்''

என்று கூறுவதால் அறியலாம்.

கைகேயி, வசிட்டன் ஆகிய இருவரும்இராமன் பால் தனித்த அன்பு கொண்டனர் என்பதற்கு மேற்குறித்த காட்டுகள் சான்றாவன. இவர் இருவர் நீங்கிய ஏனைக் குகனும், இலக்குவனும், கோசலையும் இராமன்பால் அதிக அன்புகொண்டது இயல்பே. தசரதன் ஏனைய மூன்று மக்களினும் இராமன்பால் மிகுதியான அன்பு காட்டியது வெளிப்படை. அதற்குக் காரணம் தன் புத்திரன் பிரிவால் தன் உயிருக்குக் கேடு நேரும் என்று தசரதன் பெற்றிருந்த சாபத்தால் விளைந்த அச்சமும் அப்படிப் பிரிந்துவிடக் கூடாதே என்பதால் விளைந்த அன்புமாக இருக்கலாம்.

நாம் இங்குக் காண வேண்டிய புதிய கண்ணோட்டம், ஒருவர் பால் கொள்ளும் மிகுதியான அன்பு பிறிதொருவர்பால் காரணமின்றியே வெறுப்பை உண்டாக்குகிறது என்பதாம். அங்ஙனம் எழும் வெறுப்பு பங்கமில் குணத்தானாக இருப்பினும் பாதிக்கும் என்பதையும் விளக்குவதாகும்.

இவ்வறுவரும் குறிப்பாகக் கைகேயி, வரதன் பால் கொண்ட தனி மனித பேரன்பு வழிபாட்டினால் பங்கமில் குணத்தான் உள்ளத்தால் எவ்வாறு பாதிக்கப்பட்டான் என்பதையும் கம்பன் மிக உருக்கமாகக் காட்டுகிறான்.

வரதனை அழைத்து வந்து நாட்டாட்சியை ஒப்புவிக்கப் பரதன் பெரும்படையுடன் வந்தான்; குகன் முதலில் அவனைப் பிழைபட உணர்ந்தான். பின்னர் பரதன் வரதன்பால் கொண்ட அன்பை அறிந்து உருகினான். பரதனுடன் வந்த படைகளைத் தென்கரைக்கு அனுப்பிவிட்டுக் கடைசியாகத் தன்னுடன் எழுவராக ஒரு படகில் வந்தான்.

இப்போது ஒரு படகில் கோசலை, சுமித்திரை கைகேயி, பரதன், சத்துருக்கனன், குகன், தேர் பாகன் சுமந்திரன் ஆகிய எழுவரும் வந்தனர்.

தாய்மார் மூவரையும் அறிமுகப்படுத்திக் கொள்ள விழைந்தான் குகன்.

முதற்கண் சுற்றத்தாரும் தேவரும் தொழுமாறு நிற்கின்ற கோசலையை அறிமுகப்படுத்திக் கொள்ள விரும்பிய குகன், கோசலையை வணங்கிப் பின் பரதனை நோக்கி 'வெற்றித்தார் குரிசில்! இவர் யார்?'' என்று கேட்டான். அதற்கு விடையிறுத்த பரதன் ''வேந்தர்கள் வந்து காத்திருக்கும் அரசமுற்றத்தையுடைய தயரதனின் முதல் தேவி; மூவுலகத்தையும் ஈன்ற பிரமனை முன் ஈன்ற திருமாலைத் தான் ஈன்றவள். என்ன பயன்? அத்தகு பெருஞ்செல்வத்தைப் பெற்றவள், பரதனாகிய இப்பாவி பிறந்ததால் அச்செல்வத்தை இழந்து விட்டு நிற்கும் பெரியாள் இவள்'' என்றான்.

'சுற்றத்தார் தேவரோடும் தொழ நின்ற
கோசலையைத் தொழுது நோக்கி
வெற்றித்தார் குரிசில் இவர் யார் எனக்
குகன் வினவ, வேந்தர் வைகும்
முற்றத்தான் முதல்தேவி; மூன்று
உலகும் ஈன்றானை முன்னீன்றானைப்
பெற்றதால் பெருஞ்செல்வம்; யான்
பிறத்தலால் துறந்த பெரியாள்?'' என்றான்.

மேற்குறித்த பாடலில் பரதன் கோசலையைக் குகனுக்கு அறிமுகப்படுத்தும் முறையில் இருவிதமாக அறிமுகப்படுத்தியுள்ளான்.

1. ஒன்று தயரதனுக்கு முதல்தேவி கோசலை என்பது
2. மற்றொன்று இராமனுக்குத்தாய்என்பது

அடுத்து கோசலைக்குப் பக்கத்தில் தருமத்தின் வடிவமாக நிற்கும் சுமத்திரையை நோக்கி வணங்கிப் பின்னர் குகன் பரதனை நோக்கி 'ஐய! இவ்வன் பின் நிறைந்தாளைக் குறித்து உரை'' எனக் கேட்கப் பரதன் 'நெறி மாறாத மெய்யாகிய உண்மையை நிறுத்தற் பொருட்டு உடம்பாகிய மெய்யை விடுத்த தயரதன் இளந்தேவி; எல்லோருக்கும் குலதெய்வமாக விளங்குகின்ற இராமனுக்குப் பின்பு பிறந்தவன் என்று சொல்லும் போதே இவன் என்று சொல்லத்தக்க இலக்குவனை ஈன்ற பெரியவள்'' என்றான்.

''அறம் தானே என்கின்ற அயல் நின்றாள்
தனைநோக்கி, 'ஐய! அன்பின்
நிறைந்தாளை உரை என்ன, 'நெறி
திறம்பாத் தன் மெய்யை நிற்பதாக்கி
இறந்தான் தன் இளந்தேவி! யாவர்க்கும்
தொழுகுலமாம் இராமன் பின்பு
பிறந்தாருள்ளும் உளன் என்னப் பிரியாதான்
தனைப் பயந்த பெரியாள்' என்றாள்''

இப்பாடலிலும் பரதன் சுமத்திரையைக் குகனுக்கு அறிமுகப்படுத்தும் முறையில் இருவிதமாக அறிமுகப்படுத்தியுள்ளான்.

1. தயரதனுக்கு இளந்தேவி சுமித்திரை என்பது,
2. மற்றொன்று இலக்குவனுக்குத் தாய் என்பது.

மூன்றாவதாக ஒருத்தி நிற்கிறாள், கைகேயி. இப்போது இக்கைகேயியை அறிமுகப்படுத்தும் இடத்தில்தான் பங்கமில் குணத்தான் உள்ளம் எத்தகைய இழிநிலையில் எண்ணி வருந்துகிறதுஎன்பது புலப்படுகிறது.

இப்போது கைகேயியை எப்படி பரதன் குகனுக்கு அறிமுகப்படுத்துவான்? பரதன் தவிக்கிறான். அவன் உள்ளம் துடிக்கிறது. ஏன்? தன்தாயைத் தன்னை, தந்தையை அறிமுகப் படுத்த இயலாமையால், எங்ஙனம்?

# திருவாதிரைக்களி

சேந்தனார் சிறந்த சிவபக்தர், தில்லை நடராசர்மேல் பெரும்பக்தி பூண்டவர். இவர் விறகு வெட்டி விற்றுப் பிழைத்து வந்தார். தமக்குக் கிடைத்த சிறு வருவாயிலும் கூட நாளும் சிவபெருமானுக்கு அமுது படைத்து அவ்வமுதை சிவனடியார்க்கும் பங்கிட்டுக் கொடுத்து மனநிறைவுடன் வாழ்ந்து வந்தார்.

இவருடைய இறையன்பை உலகிற்கு உணர்த்தத் திருவுளங்கொண்டார் தில்லை நடராஜர். ஓர் நாள் நள்ளிரவு இறைவனார் ஓர் அடியவரைப் போல வேடம் கொண்டு, சேந்தனார் இல்லம் அடைந்து தம் பசிக்கு ஏதேனும் உணவு தருமாறு வேண்டினார். சேந்தனார் தம்மிடம் இருந்த களி உணவைப் பக்தியுடன் அடியவருக்குப் படைத்தார். சேந்தனார் தமக்குக் களி வழங்கிய இந் நிகழ்ச்சியினை அனைவரும் அறிந்து கொள்ளும் பொருட்டு இறைவன் தமது திருமேனியிலும் திருக்கோயிலின் பல இடங்களிலும் அக்களி உணவு சிதறிக் கிடக்குமாறு செய்தருளினார்.

மறுநாள் ஆலயத்தைத் திறந்தபொழுது ஆலயமெங்கும் களி உணவு சிதறிக் கிடக்கக் கண்ட தீட்சிதர் பெருமக்கள் ''யார் இந்த அனுசிதம் செய்தது'' எனக் கவலைக் கொண்டு தில்லை கூத்தரிடம் முறையிட்ட பொழுது ''அனுசிதம் அன்று; இது நமக்குப் புனிதம். சேந்தனார் செய்துவரும் திருத் தொண்டின் பெருமையைப் போற்றியே யாமே களியை ஆலயமெங்கும் சிந்தினோம். எம் மேனியிலும் சிந்திக் கொண்டோம். அன்பொடு ஈயும் களி எமக்கு அமுதமே ஆகும். திருவாதிரைத் திருநாளில் யாம் உவந்து சேந்தனாரிடம் ஏற்றுக் கொண்ட களியை எமக்கு இட்டுப் படைப்பீராக'' என்று திருவருள் புரிந்தமைக்கிணங்கவே திருவாதிரை நாளில் களி ஈசனுக்கு படைக்கப்படுகிறது.

---

பரதன் இப்போது கைகேயியை என்ன சொல்லி அறிமுகப்படுத்துவது?

கோசலையை அறிமுகப்படுத்தும்போது முதல் தேவி என்றும், சுமித்திரையை அறிமுகப்படுத்தும் போது இளந்தேவி என்றும் கூறியது போலவே கைகேயியை தயரதன் மூன்றாம் தேவி என்று அறிமுகப்படுத்த வேண்டியதுதானே? எப்படி முடியும்? தயரதன்தான் சாகும்போது 'இவளை மனைவி அல்ல' என்று சொல்லி விட்டானே!

கோசலையை இராமனுக்குத் தாய் என்றும், சுமித்திரையை இலக்குவனுக்குத் தாய் என்றும் அறிமுகப்படுத்தியதுபோலக் கைகேயியைத்தனக்கு தாய் என்று பரதன் அறிமுகப்படுத்திக் கொள்ள வேண்டியதுதானே? அதுவும் முடியாதே! ஏன்? தயரதன் சாகும்போது பரதனாகிய தன்னையும் 'பிள்ளை இல்லை' என்று சொல்லிவிட்டானே.

அதனால் பரதன் கைகேயியை அறிமுகப் படுத்தும்போது ''துன்பங்கள் அனைத்தையும் படைத்தவளை, பழிவளர்க்கும் செவிலியை, பாழாய்ப் போன பாவக்குடலில் என்னைக் கிடத்தியவள். எவர் உடலிலும் உயிரில்லை என்று பாரம் குறைந்திருக்கும் மக்கள் நிறைந்திருக்கும் உலகில் இவ்ள் ஒருத்திதானே இன்முகத்துடன் நிற்கின்றாள். இங்கே நின்ற இவள் என்னைப் பெற்றாள்''

'படரெல்லாம் படைத்தாளை, பழிவளர்க்கும்
செவிலியைத் தன் பாழ்த்த பாவிக்
குடலிலே நெடுங்காலம் கிடந்த எற்கும்
உயிர்ப் பாரம் குறைந்து தேய
உடலெல்லாம் உயிரில்லா எனத்தோன்றும்
உலகத்தே இவ்வொருத்தி அன்றே
இடரில்லா முகத்தாளை, அறிந்திலையேல்
இந்நின்றாள் என்னை ஈன்றாள்!''

முன்னர் கோசலையும், சுமித்திரையும் தயரதனுக்கு முதல் மனைவி, இளந்தேவி என்றும் இராமனுக்குத் தாய், இலக்குவனுக்குத் தாய் என்றும் முறையே அறிமுகப்படுத்தியதுபோல் கைகேயியை 'தயரதனுக்குத் தேவி என்றோ தனக்குத்தாய்' என்றோ இணைத்து அறிமுகப்படுத்திக் கொள்ள முடியவில்லை.

தயரதன் கைகேயியை மனைவியல்ல வென்றும், தன்னைப் பிள்ளை இல்லை என்றும் சொல்லி விட்டதால் தற்போது குகனுக்குப் பரதன் கைகேயியை அறிமுகப்படுத்தும்போது தந்தை பெயரைச் சம்பந்தப்படுத்தாது 'இவள் என்னைப் பெற்றாள்' என்று மட்டுமே சொன்னான்.

தந்தையின் பெயர் கூறித் தன்னை அறிமுகப் படுத்திக் கொள்ள முடியாத பிள்ளையாய் போனவன் யார்?

பங்கமில் குணத்தான் என்னும் பரதன் தான்.

(நிறைவு பெறுகிறது)

# ஸ்ரீ ராகு பகவான் கோடி அர்ச்சனை

# ஸ்ரீ அருள்மிகு நாகநாத சுவாமி திருக்கோயில்,

( ஸ்ரீ ராகுஸ்தலம் )

## திருநாகேஸ்வரம்-612 204, கும்பகோணம் வட்டம்

கும்பகோணம் வட்டம் திருநாகேஸ்வரம் ஸ்ரீ அருள்மிகு நாகநாதசுவாமி கோயிலில் ஸ்ரீ ராகு பகவான் தன் இரு தேவியருடன் தனி சன்னதி கொண்டு எழுந்தருளி அருள்பாலித்து வருகிறார்.

ஸ்ரீ ராகு பகவான் பூஜித்து சிறப்பு பெற்ற இத்தலம் ராகு தோஷம், திருமண தோஷம், காலசர்ப்ப தோஷம், புத்திர தோஷம் நிவர்த்தி செய்து தனி சிறப்பு பெற்று விளங்கி வருகிறது. இப்பெருமானுக்கு

**"பால் அபிஷேகம் செய்தால், பால் நீல நிறமாவதை"**

பக்தர்கள் நேரே வந்து பார்க்கும் அற்புதமாகும். நாட்டின் பல பாகங்களில் இருந்தும் பக்தர்கள் ராகு தோஷம் நிவர்த்திக்கு வந்து பால் அபிசேகம் செய்து பலன் பெறுகிறார்கள். உலக நன்மைக்காகவும் ஸ்ரீ ராகு பகவானுடைய அருளை வேண்டியும் அவர் திருவருளுடன் ஸ்ரீராகு பகவானுக்கு 27-7-86 முதல் கோடி அர்ச்சனை துவங்கி நடைபெறுகிறது. 27-11-87 அன்று 75 இலட்சம் முடிந்து பிரதி தினமும் மாலை 6 மணிக்கு தொடங்கி கோடி அர்ச்சனை நடைபெறுகிறது. தாங்களும் கோடி அர்ச்சனையில் கலந்துகொண்டு, ஸ்ரீ ராகு பகவானின் அருளை பெற வேண்டுகிறோம்.

*(1)* கோடி அர்ச்சனை 1-க்கு கட்டணம் ரூ. 25 மட்டும்.

*(2)* பால் அபிஷேகம் செய்ய கட்டணம் ரூ. 50 மட்டும்.

*(3)* உஷக்கால கட்டளை வைப்பு நிதிக்கு கட்டணம் ரூ. 200.

*(4)* கோடி அர்ச்சனை செய்ய விரும்புவோர் ரூ. 25 எம். ஓ. அனுப்பி பெயர், நட்சத்திரம், கோத்திரம் முகவரி அனுப்பவும்.

**கட்டணம் அனுப்ப வேண்டிய முகவரி :**

**ஸ்ரீ ராகு பகவான் கோடி அர்ச்சனைக் குழு,**
**ஸ்ரீ அருள்மிகு நாகநாத சுவாமி திருக்கோயில்,**
**திருநாகேஸ்வரம் அஞ்சல், கும்பகோணம் வட்டம்,**
**தஞ்சை ஜில்லா - 612 204.**

# அருள்மிகு பண்ணாரி மாரியம்மன்

சு. சண்முகம்

முந்திய முதல்நடு இறுதியும் ஆனாய்
மூவரும் அறிகிலர் யாவர் மற்றறிவார்
பந்தணை விரலியும் நீயும் நின்னடியார்
பழங்குடில் தோறும் எழுந்தருளிய பரனே

என எம்பிரான் சிவபெருமானும் பராசக்தியும் அடியவர்களின் பழங்குடில் தோறும் எழுந்தருளி அருள் புரிந்த பெருமையினை மணிவாசகப் பெருமாள் தன் திருவாசகத்தில் (திருப்பள்ளியெழுச்சி) புகழ்ந்துரைக்கிறார். மேலும் தாயாகவே ஆகி சிவபெருமான் எப்படி அருள்புரிகிறார் என்பதையும்,

என்பு நைந்துருகி நெக்குநெக்கு ஏங்கி
அன்பு எனும்ஆறு கரையது புரள
நன்பு லம்ஒன்றி நாத என்றுஅரற்றி
உரை தடுமாறி உரோமம் சிலர்ப்பக்
கரம லர்மொட்டித்து இருதயம்மலரக்
கண்களி கூர நுண்துளி அரும்பச்
சாயா அன்பினை நாள்தொறும்
தழைப்பவர்
தாயே ஆகிவளர்த்தனை போற்றி

எனப் போற்றித்திரு அகவலில் எடுத்துரைக்கிறார்.

மணிவாசகர் கண்டமாதிரி என்புருக ஏங்கி அன்பு ஆறாக கரைபுரளவும் உரோமம் சிலிர்த்து, இருதயம் மலர்ந்து கண்களில் நீர் புரள நாள்தொறும் அன்பு செலுத்தும் மெய்யன்பர்கள் காலமாற்றத்தால் தற்காலம் மிகக் குறைந்து போயினும், இறைவன் தன்குழந்தைகளாம்மக்களை நல்வழி நடத்தி அவர்களை அன்புச் செல்வங்களாய் மாற்றுவதற்கும் அவர்கள் நன்மை பல பெற்று நல்வாழ்வு வாழ வைப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளார். இதுவே இறையருள் தத்துவம். அதற்கென் இறைவனும் இறைவியும் அவ்வப்போது தோன்றி மக்களை காத்து நின்று அவ்வவ் விடங்களில் சேர்ந்தோ தனித்தனியாகவோ கோவில் கொண்டிருக்கின்றனர். அவ்வாறு தாய் பண்ணாரி மாரியம்மனாக, பெரியார் மாவட்டம், சத்தியமங்கலத்திலிருந்து மைசூர் செல்லும் பாதையில் எட்டுக்கல் தொலைவில் திம்பம் மலையடிவாரத்தில் எல்லைத் தெய்வமாக, குடி கொண்டிருக்கிறார்.

தாயின்பெயரே ஊர். ஊரின் பெயரே தாய். தாய் குடிகொண்டிருக்கும் கோவிலைச் சுற்றி அவருக்கு ஊழியஞ் செய்யும் கோவில்அதிகாரிகளையும் ஊழியர்களையும் மற்றும் சில பூசைப் பொருட்கள் வியாபாரிகளையும் தவிர்த்து வேறு குடியிருப்புகள் இல்லை. சத்தி-மைசூர் மார்க்கத்தில் பண்ணாரியம்மன் கோவில் கொண்டுள்ள இடத்திலிருந்து மலைப்பாதை ஆரம்பமாகிறது. எனவே இவ்வழி செல்லும் அனைத்து மக்களும் (கார், லாரி, பேருந்து) தாயை தரிசனம் செய்த பின்னரே மலைப் பாதை வழி செல்கின்றனர். இது நல்ல காட்டுப் பகுதி. யானை நடமாட்டமும் உண்டு. இவ்வழி செல்லும் மக்களும் எவ்வித இடையூறும் இன்றி இப்பாதையில் சென்று வர காத்து நிற்கிறாள் தாய். இப்பாதையில் எத்தனையோ வாகனங்கள் சென்று வருகின்றன. அம்மையின் அருளால் எந்த விபத்தும் நேர்ந்ததேயில்லை. இரவு பகல் எந்நேரமும் மக்கள் தரிசனம் செய்யும் வகையில் கோவில் கம்பிக்கதவுகளையே கொண்டுள்ளது.

சில ஆண்டுகட்கு முன், இவ்வாறு ஒருமுறை பேருந்தில் வந்தவர்கள் கோவில் வாசலில் இறங்கி அம்மனை வழிபடச் சென்ற சமயம் அதே பேருந்தில் வந்த சில துடிப்பு மிக்க இளைஞர்கள் தாங்கள் இறங்கி தரிசிக்காமல் வண்டியில் இருந்து கொண்டே தரிசனம் செய்துதிரும்பியவர்களைப்பரிகசித்துக்கொண்டிருந்தனர். வண்டி மலைப்பாதையில் சிறிது தூரம் சென்ற பின் காட்டு யானை ஒன்று வழியில் நின்று கொண்டிருந்தது. வண்டி பின்னாலும் வரமுடியாது. முன்னாலும் செல்ல முடியாத நிலை. யானையோ பேருந்தை நோக்கி வருகிறது. இளைஞர்களின் துடிப்பும் பரிகாசமும் இருந்த இடம் தெரியாமல் மறைந்து, குற்றம் செய்த குழந்தை தன் தாயிடம் அழுது வேண்டுவது போல, வண்டியில் இருந்தவர்கள் தங்கள் தவற்றை உணர்ந்து திரும்பி வரும்போது பண்ணாரித் தாயிடம் நேரில் சென்று மன்னிப்பு வேண்டுவதாக உரைத்த மாத்திரத்தில் யானை மலைப்பாதையினை விட்டு இறங்கி மறைந்தது. இதுபோல அவ்வப்போது தொன்று தொட்டு சிற்சிலநிகழ்ச்சிகள் நடந்து வருவதாக அங்கு வந்து செல்லும் பக்தர்கள் வாயிலாக அறிகிறோம்.

இவ்விடத்தில் தாய் சுயம்புவாய் தோன்றிய வரலாறு அற்புதமானது. முன்பு இவ்விடம்



கடம்பவனப் பிரதேசமாக இருந்தபோது வெள்ளியம்பாளையம், பீர்க்கர் பாளையம், சக்கரசம்பாளையம் ஆகிய அருகிலிருந்த ஊர்களிலிருந்து மக்கள் தங்கள் மாடுகளை மேய்ப்பதற்கு ஓட்டி வருவார்கள். பட்டிகளும் அமைத்துக் கொள்வார்கள். இப்போதும் சில பட்டிகள் உண்டு. ஒரு சமயம் ஒரு காராம்பசு மட்டும் தொடர்ந்து சில நாட்களாகப் பால் கறக்க எத்தனித்தால் கறக்கவும் நில்லாமல் கன்றுக்கும் ஈயாமல் முரண்பட்டு வந்தது. இதன் காரணம் அறிய இப்பசுவை எப்போதும் போல் மேய்வதற்கு அனுப்பி விட்டு மறைந்து கவனித்தபோது ஓரிடத்தில் நின்று அதுதன் பாலைப் பொழிவதை உரிமையாளர் கண்டார். இவ்வதிசயத்தை ஊர்ப்பெரியவர்களிடம் சொல்லி அவர்களுடன் சென்று பசுபால் பொழிந்த இடத்தைப் பார்த்தனர். அவ்விடத்தில் (கணாங்குப்புல்) கணம் புற்கள் சூழ்ந்த ஓர் புற்றும் அதனருகில் ஓர் லிங்கத் திருவுருவமும், இருக்கக்கண்டு அனைவரும் பரவசம் அடைந்தனர். உடனே பக்கத்து ஊர்மக்களுக்கும் சொல்லி அனுப்பினர். பெரியதனக்காரர்களும் ஊர்பொதுமக்களுமாக வந்து இவ்வதிசயத்தைக் கண்ணுற்று யாதும் தோன்றாது பரவசம் அடைந்து நின்றனர். அப்போது கூட்டத்திலிருந்த பீர்க்கர் பாளையத்தைச் சேர்ந்த நஞ்சப்பருக்குத் தெய்வ ஆவேசம் உண்டாகி தன்னைப் பண்ணாரி மாரி என கொண்டாடிப் பணியும்படி ஆணை பிறப்பிக்க, உடனே பச்சிலைகளால் ஒரு பந்தல் அமைத்து தேவியைப் பூசித்தனர்.

அம்மையை முதன் முதல் கண்டு தரிசித்த பசுவின் சொந்தக்காரரான போரப்பரின் உருவம் இன்றைய ஆலயத்தின் மூலஸ்தானத்திற்கு முன்புறம் இருக்கும் மண்டபத்தில் ஒரு மூலையில் அமைக்கப்பட்டிருக்கிறது. தெய்வ ஆவேசம் வந்து அருள் வாக்கு விளம்பிய பீரக்கர்பாளையத்து நஞ்சப்பரின் சந்ததியருக்கு இன்றும் தேவராட்டிக் குடும்பம் என்று பெயர் வழங்கப்படுகிறது.

அம்மை இவ்வாறு பண்ணாரியில் கோயில் கொண்ட வரலாற்றினை கவிதையாக அமரர் காளியண்ண உபாத்தியாயர் படைத்திருக்கிறார். அதிலிருந்து இரண்டு பாடல்கள் :

''அருவமும் உருவமும் ஆகிஅன்பர்தம்
அன்புமாகிப்
பெருந்தவம் செய்வோர் தாங்கள் பெறும்
தவமாகி மற்றும்
கருதிடும் வரங்கள்ஈய கவினுறு லிங்கமாகி
ஒருதனிக் கோயில்கொண்டாள் உலகுளோர்
உய்யமாதோ''

''அறமுதல் வீடீறாக அன்பர்கள் அடைய
அன்பு
திறலுடன் ஈயும்சக்தி சிவனிடத்திருந்தும்
சீவர்
பெயநினைந்திட்ட பேற்றைப் பெருமையோடு
அளிக்கநல்ல
அறம்வளர்த்திடப் பண்ணாரி அம்மையாய்
அவனியுற்றாள்.''

இவ்வாறு தாய் வந்தமர்ந்த தனிக் கோவில், கால ஓட்டத்தில் கண்டு அரிசித்து பேறுபல பெற்ற அளவற்ற அன்பு மக்களால்



## சாமியே சரணம்

பந்தளத்தில் அரசிளங் கன்றாய் நின்றாய்
பம்பையிலே உதித்திட்ட பாலன் ஆனாய்
சுந்தரனே அரசானாய் அச்சன் கோயில்
துய்யனே குளத்துப்பிறை பாலன் ஆனாய்
அந்தரமாய் காந்தமலை ஜோதி ஆனாய்
ஆரியங் காவலிலே அய்யன் ஆனாய்
சிந்தைமிகு எரிமேலி வேடன் ஆனாய்
திருவடியைத் தொழுவோர்க்குத் தெய்வம் நீயே

—அய்யப்பன் பாமலை

---

வளர்ந்து இன்று கோபுரத்தோடு கண்டோர் வியக்கும் வண்ணம் உள்ளது. சுயம்புலிங்கத்துடன் அம்பிகையின் அருள் திரு உருவம் வடிக்கப்பட்டு தாய் தென்திசை நோக்கி அமர்ந்து அருள்பாலித்து வருகிறார். தன்னைத் தேடி வரும் அன்பர்களை எந்த நேரத்திலும் கண் துஞ்சாது காத்திருந்து நோக்கி அருள் மழை பொழிகிறார். கோவில் அர்த்தமண்டபத்தில் ஸ்ரீவிநாயகப் பெருமான் கிழக்கு நோக்கியும், பொம்மைராயசுவாமி மேற்கு நோக்கியும் அருள்பாலிக்கின்றனர். திருக்கோவிலுக்குத் தெற்கு பக்கத்தில் மேடை மீது ஸ்ரீமாதேசுவர மூர்த்தியும் மூன்றுகல் தொலைவில் மாதேசுவரசுவாமி கோவிலும் தீர்த்தக் கிணறும் உள்ளது. இதனருகில் அருள்மிகு சருக மாரியம்மையும் வண்டி முனியப்பசுவாமியும் அமர்ந்து அருள்புரிகிறார்கள். கோவில் உள்ள இடம் வனப் பகுதி. அருகில் நெடிதுயர்ந்த மலை. இயற்கை எழில் சூழ்ந்து நிற்கும் இத்தகைய ரம்யமான சூழலில் கருங்கல்லால் அமைக்கப்பட்ட பெரிய மண்டபத்துடன்கோவில் அழகுறதூய்மையுடன்உள்ளது. பயணிகள் தங்க நல்ல இடவசதிகள், தனி அறைகள் கிடைக்கும். இந்து மத அறநிலையத்துறையின் உதவி ஆணையர், செயல் அலுவலராக இருந்து வருகிறார். இவரும் தர்மகர்த்தர்களும் அம்பிகையின் அருள்பெறவரும் மக்கட்கு வசதிகளைப் பெருக்குவதில் நாட்டம் கொண்டுள்ளனர். திருமண மண்டபமும் ஒன்று கட்டப்பட்டிருக்கிறது.

ஆண்டுதோறும் பங்குனி மாதம் உத்தர நட்சத்திரம் அதாவது பௌர்ணமிக்கு 15 நாட்கள் முன்பு பக்கத்து ஊர் பெரியதனக்காரர்களும் ஆலய அதிகாரிகளும் அம்மனுக்கு அபிஷேகம் செய்து பூச்சாற்று நடத்தி வைப்பார்கள். பூச்சாற்றிலிருந்து 15 நாட்கள் மாறி மாறி விழாக்கோலம்தான். பதினைந்தாம் நாள் பௌர்ணமியன்று சத்தியமங்கலத்திலிருந்து பண்ணாரி வரை மக்கள் வெள்ளமாய் வந்து குவிந்து அன்னையின் அருள் வெள்ளத்தில் நீந்தித் திளைத்து இன்புறுவார்கள். அக்காட்சிதனை எழுத்துக்களில் எடுத்து யான் இயம்ப வல்லவன் அல்லேன்.

ஒருமுறை நீங்களும் அன்னையை தரிசித்து அருள்பெறல் வேண்டுகிறேன். அதற்கு நீங்கள் கோவை அல்லது ஈரோட்டிலிருந்து சத்தியமங்கலம் அடைந்து அங்கிருந்துபேருந்துகளில் செல்லலாம். கோவிலே ஊரானதால் கோவில் வாயிலிலேயே பேருந்துகள் நிற்கும். அம்மாவின் அருட்கடாட்சத்தில் வேண்டுவது கிடைக்கும். தாய் வேண்டுவோர்க்கு வேண்டும் வரம் அருளும் விவரம் காளியண்ண உபாத்தியாயரின்கவிதை வடிவில் :

'திருவருள் சேர்ந்திலங்கிடு பண்ணாரித்தேவி
திருவருளே சதமெனவே தினம் அன்பாகக்
கருதிடுவோர் தமக்கு உலகில் கருணையாகக்
கருது(ம்) பொருள் ஈந்திடுவாள் கதியை வேண்டிப்

பெருமைமிகும் தவம்புரியும் பெற்றியார்க்குப்
பெரும் கதியை அளித்திடுவாள் பெம்மானோடு இங்கு
ஒருபுறமும் அன்பர் உள்ளத்துள்ளும் உள்ளே
ஒளிர்பவளாம் நம் அன்னைக்கீது உரிமையன்றோ?

வாழி பண்ணாரி வளர்மாரி உமைவாழி
மாதேசுவரன் சருகுமாரிஇவர் வாழி
வாழிபொம்மையனும் மாதேவன்வாழி
வாரணமுகம் கொண்ட காரணனும்வாழி !


மங்கல மார்கழி!
கதை: செவ்வேள்
படம்: M.N. ராஜா
மங்கல மார்கழி மாதம்.! ஆண்டுதோறும் விடிகாலைப் பூஜையில் தவறாமல் கலந்து கொள்வான் சண்முகம்
மார்கழித் திங்கள் மதிநிறைந்த நன்னாளால் நீராடப் போதுவீர் போதுமினோ நேரிழையீர்...
ஒரு நாள் சண்முகம் சற்றுத்தாமதமாக எழவே அவன் குளித்து வருவதற்குள் பூஜை முடிந்து விட்டது. "அடடா' பூஜை முடிந்து விட்டதே!" என்று அவன் வருந்த, "இந்தாருங்கள் பிரசாதம்."
என்று வழங்கினாள் கமலா: "நன்றி" என்று பிரசாதத்தைப் பெற்றுக் கொண்ட சண்-முகம், கமலாவும் தவறாமல் நாள்தோறும் வந்து பூஜையில் கலந்துக் கொள்வதைக் கவனிக்கத் தவறவில்லை
அவர்கள் இருவரும் பணிபுரியும் அலுவலகங்களும்
அருகருகிலேயே இருந்தன. அதனால் மாலையிலும் கூட அவர்கள் ஒருவரை ஒருவர் பார்த்துப் பேசிப் பழக வாய்ப்பு ஏற்பட்டது. அவர்கள் பழக்கமும் நாளடைவில் அன்பாக மலர்ந்தது.
யாதும் ஊரே யாவரும் கேளிர்" என்று 2000 ஆண்டுகளுக்கு முன்பே பாடியிருக்கிறார் ஒரு புலவர்.
வள்ளுவரும் தான் பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் என்கிறார்.
"சாத்திரம் பலபேசும் சழக்கர்காள்" என்பது திருநாவுக்கரசரின் கருத்து
ஆம், "சாதிகள் இல்லையடி பாப்பா" பாரதியாரின் இந்த வரி எல்லோருக்கும் தெரியுமே!
ஒத்த கருத்துடைய நாம் இருவரும் வாழ்க்கையிலும் கூட இணைந்தால் என்ன?


அறிவிப்பு
100 மணமக்களுக்கு
அறநிலையத்துறை
நடத்தி வைக்கும்
சிறப்புத் திருமணங்கள்.
விரும்புவோர்
விண்ணப்பிக்கவும்
நிர்வாக அதிகாரி
சணமுகமும் கமலாவும் தங்கள் திருமணத்திற்கு
இந்த அறிவிப்பை வாய்ப்பாகப் பயன்படுத்திக்
கொள்ள முடிவு செய்தார்கள்
சமயத் தலைவர்களும், முக்கியப் பிரமுகர்
களும் வாழ்த்துக்கள் வழங்கி மங்கலநாண்
எடுத்து வழங்க, 99 மணமக்களுடன்
நூறாவது மணமக்களாக சண்முகம்-
கமலா திருமணமும் இனிதே நிறைவேறியது
ஊர் கூடி வாழ்த்தி, திருமணம் முடித்த அவர்களைப்
"பெற்றோர்கள் என்ன சொல்வார்களோ" என்ற
பயம் வாட்டியது. மாலையும் கழுத்துமாய் கமலாவை
அழைத்துக் கொண்டு, தயங்கித் தயங்கி வீட்டிற்கு
வந்த சண்முகத்தை,
வாடா, மகனே வா!! என்னால் அந்த காலத்தில் சாதிக்க முடியாததைச் சாதித்த வீர சிங்கமே அஞ்சாமல் வா..!.
தந்தையின் வரவேற்பு உற்சாகப்படுத்தியது. அவர்களை ஆரத்தி எடுத்து வரவேற்றாள் சண்முகத்தின் தாய்.
மூன்றாண்டுகளுக்குப் பிறகு சண்முகம்-
கமலாவிற்கு முதல் குழந்தை பெண்ணாகப் பிறந்தது. "சிறப்புத் திருமணச்
செல்வி – இதுதான் பொருத்தமான பெயர்"
என்றான் அவன் "மங்கல மார்கழி –
இதுதான் சரியான பெயர்" என்றாள்
அவன் தாத்தாவும் அதையே பொருத்தம்
என்று தீர்ப்பு வழங்க, அதை ஆமோதிப்ப
தைப் போல் கைகளைத் தட்டி ஆரவாரித்
தாள் 'மங்கல மார்கழி".

# கமலாலயம் கண்ட கடவுள் தொண்டர்

திருமதி சௌந்தரா கைலாசம்



உச்சிமீதேற்றி வைத்து உலகுகொண்டாடும் எங்கள்
சச்சிதா னந்த ஸ்வாமி தத்துவம் உணர்ந்த ஞானி!
எச்சுகம் தன்னைத் தெய்வ பக்தியால் எய்தினாரோ
அச்சுகம் தன்னை மற்றோர்க்(கு) அருளிட விரும்பும் மேதை!

எத்தியே புகழில் ஏறி எலும்பெலாம் முறியக் கீழே
பொத்தென விழுந்து மெத்தப் புலம்பிடும் போலி அல்ல!
எத்திசை ஓடி, எங்கே, எப்படி, ஒளிவதென்று
தத்தளித் திருப்போர் அல்ல சச்சிதா னந்தஸ்வாமி!

எங்கு சென்றாலும் அன்னார்க்(கு) இருப்பது வரவேற்புத்தான்
தங்குதல் இங்கே என்னும் தனிப்பெரும் வேண்டுகோள்தான்!
பொங்கிடுங்கருணையாலே போதனை செய்யவந்த
எங்குரு என்றெல்லோரும் இதயத்தில் நிறைவைப் பாரே

வழிபல சொல்லிச் சொல்லி வார்த்தையை நிரப்பி டாமல்
மொழிபல சொல்லிச் சொல்லி மூளையைக் குழப் பிடாமல்
தெளிவுறுச் சிலசொல் கூறும் சச்சிதானந்த தேவன்
விழியிலே உள்ள பார்வை வேதங்கள் தம்மின் கோவை!

சோற்றிலே வாயழுந்தசுண்டியே இழுக்கும்காமச்
சேற்றிலே காலழுந்தச் சிக்கியோர் தம்மை, ஞான
ஊற்றிலே குளிக்க மீட்டு ஒன்றெனில் ஒன்றாம் அந்தப்
பேற்றிலே திளைக்க வைக்கும் பேருழைப்பாளர் ஸ்வாமி!

பொய்யினை மெய்யைப் போலப் புவியெலாம் மயங்கப் பேசிப்
பையினை நிரப்பப் போகும் பகல்வேஷ தாரியல்ல!
செய்கையும் சொல்லும் ஒன்றாய், தெய்வமே வாழ்க்கை யென்று
கைகளைக் குவித்து வாழும் கலங்கரை விளக்கம் ஸ்வாமி!

ஓடிடும் பொருள்களின் மேல் உயிரையே வைத்து நெஞ்சம்
வாடிடும் மானுடத்தை ''வருகவே வருக நன்மை
கூடிடும்'' என்று யோகக் குறிப்பினைக் குரல் எடுத்துப்
பாடிடு கின்ற ஞானப் பறவையே நமது ஸ்வாமி!

இதற்குமேல் என்ன என்று இறுமாந் திருந்தபேர்க்கு
இதற்குமேல் ஒன்றுண் டென்று அறிவித்த தேவ தேவா
எதற்குமேல் எதுவுமில்லை? எமக்கது வேண்டும் தேவா!
கதறிடுகின்றோம், ஏற்றுக் ககனமாய் மண்ணை மாற்று.

நீருளே பூத்து நிற்கும் தாமரை மலரை இந்த
ஊருளே பூக்கவைக்கும் ஒருவனே! சத்தியத்தைப்
பாருளே நேசித் தெங்கும் பார்க்கிறாய் மாயம் செய்யும்
போருளே வெற்றி பெற்ற புனிதனே! வாழி வாழி!


தாமரைஎன்னும் பேரைத்தாங்கிடும் ஆஸ்ரமத்தை
மாமுனி ஏற்ப டுத்தி வையக மாந்தரெல்லாம்
சேமமே உறுதல் வேண்டிச் செய்கிறாய் சிறந்த சேவை
ஓமெனும் அதனை நாங்கள் உணர நீ தேவை! தேவை!

காலத்தை வெல்வ தற்குக் கண்டுள்ள ஆஸ்ரமத்தின்
கோலத்தை நினைத்து நெஞ்சம் குளிர்ந்து நாம் கூறுகின்றோம்
ஞாலத்தைக்காக்கவந்த ஞானியே! கடவுளுக்கோர்
பாலத்தை உன்னிடத்தில் பார்க்கின்றோம் போற்றி போற்றி!

நாதன் தாள் வாழ்க!

# தெய்வத்தமிழ்

இராமகதாரத்னம் **வே. தியாகராஜன்**



**இக்கட்டுரையாசிரியர் இராமகாதையைப் பாரத நாடெங்கும் 350 முறைகள் விரிவுரையாற்றி இராம பிரானுக்கு 350 முறைகள் பட்டாபிஷேகம் செய்வித்த சாதனையாளர். புலமையாளர். "அருள்மொழி அமுது" முதலான 20 சிறந்த நூல்களையும் இவர் படைத்திருக்கிறார்.**

* * *

இனிமையும் நீர்மையும் தமிழெனப்படுமே என்பது பெரியோர் கூறும் வழக்கு. தெய்வங்கள் கூட மதித்துப் போற்றிய மொழி நம் தாய் மொழி. விநாயகப் பெருமான் ஒளவையை 'விநாயகர் அகவல்' பாடி முடித்தபின் தனது துதிக்கையாலேயே தூக்கிக் கைலாயத்தில் சேர்த்து நற்பதவியளித்தார் என்பது வரலாறு. **சணிகண்ணன்** என்ற தமிழ்ப்புலவனுக்குப் பின்னாலேயே சென்ற திருமாலின் பெருமையை ''பைந்தமிழ்பின்சென்ற பச்சைப் பசுங்கொண்டலே'' எனப்பாடிப் பரவுவார் குமரகுருபரர். குமரகுருபரர் பாடிய மீனாட்சியம்மை பிள்ளைத் தமிழைக் கேட்டு மகிழ்ந்து திருமலை மன்னன் மடிமீது சிறு குழந்தை உருவில் அமர்ந்த அம்மை மீனாட்சி, மன்னரின் கழுத்திலிருந்த ஒரு அழகிய முத்து மாலையைக் கழற்றிக் குமரகுருபரருக்கு அளித்தாள். கம்பனது இராமாவதாரத்தைத் திருவரங்கம் பெரிய கோயிலிலே அவன் அரங்கேற்றியபோது நரசிம்மாவதாரக் கதையில் 'திசை திறந்தண்டம் கீறச் சிரித்தது செங்கட்சீயம்'' எனப்பாடியபோது கம்பர் மண்டபத்தின் எதிரில் கோயில் கொண்டிருந்த நரசிம்ம மூர்த்தி கடகடவென்று சிரித்தார் என்பர். திருவிளையாடற் புராணமுடையார் செந்தமிழ்ச் செல்வியான அங்கயற்கண்ணி ஆலவாயப்பன் இருவரும் செய்த விளையாடல்களில், சிவபெருமான் தமிழ்ச் சங்கத்தின் தலைவராக வீற்றிருந்ததும், தருமிக்குப் பாசுரம் எழுதியளித்து அதன் விளைவாகச் செருக்குற்ற நக்கீரனைத் தண்டித்து, கீரன் தன் குற்றத்தை உணர்ந்த காலத்து அவனுக்கு அகத்தியரைக் கொண்டு தமிழ் இலக்கணத்தைக் கற்பித்ததையும், பாண்டியனால் அவமதிக்கப்பட்ட இடைக்காட்டுப் புலவன் பின்னரே சென்றும் இயல்தமிழின் மீது தனக்குள்ள அன்பைக் காட்டியருளியதும் குறிப்பிடத்தக்கனவாகும். பாணப்பத்திரனுக்காக விறகு சுமந்து அவனது இசைப்பகையை மாற்றியும் பாணபத்திரனுக்குத் தரையின் மீது நின்று பாட வேண்டாம்'' எனப் பலகையிட்டு அருளியதும், பாணபத்திரனுக்கு, அவனிக்கு அதிபனான பாண்டியனின் பொக்கிஷத்திலிருந்து பொருளைத் திருடிக்கொண்டு வந்து உதவிப் பின்னர் சேரமானுக்கு ''என் அடியவனான பாணபத்திரனுக்கு பொருளுதவி செய்க'' எனத்திருமுகம் கொடுத்தருளியும், பாணபத்திரனின் மனைவியுடன் இசைப் போட்டிக்கு வந்த ஈழதேசத்துப் பாடினியை வெல்லுமாறு செய்தும் சிவபெருமான் தமக்கு இசைத்தமிழ் மீதிருந்த அன்பைக் காட்டினார்.

சேக்கிழார் பெருமானுக்குப் பெரிய புராணம் பாடுதற்கு 'உலகெலாம்' என அடியெடுத்துக் கொடுத்தார். சேக்கிழார் பெருமானும் தமது திருத் தொண்டர் புராணத்தில் இறைவன் அருட் செயல்கள் மிகப்பலவற்றைப் பாடிப் போற்றியுள்ளார். 'இறைவன் சுந்தரமூர்த்தி நாயனாருக்காக தூது சென்றார். அவினாசியில் முதலையுண்ட குழந்தையை உயிர்ப்பித்தார். மைலாப்பூரில் எலும்பாயிருந்த குவியலைப் பெண்ணாக்கினார். திருமறைக்காடு என்னும் வேதாரணியத்தில் வேதத்தினால் மூடப்பெற்றிருந்த கதவைத் திறக்கவும் மூடவும் தம் தமிழ்ப்பற்றினாலேயே இறைவர் அருள் புரிந்துள்ளார்.

சிவபெருமான் தானே நாடகத்தமிழிற்கும் உரியவன் என்பதைச் சிதம்பரத்திலும் மதுரையிலும் ஆடிக்காட்டியதுடன், பாண்டியன் ஒருவனின் மனவேதனையை நீக்கக் கால்மாறியாடிக் காட்டியதின் மூலம் நாடகத்தமிழிற்கும் தலைவன் எனக் காட்டினார்.

சமீபகாலப் புலவர் ஒருவர் கிளியின் குரலில் இயற்றமிழையும், குயிலின் குரலில் இசைத்தமிழை




**பழைய என்பு பொற்பாவை யதாக்குமே**

யும் மயிலின் ஆட்டத்தில் நாடகத்தமிழையும் வைத்து இறைவன் உலகையே முத்தமிழின் தோற்றமாகப் படைத்துள்ளார் எனப்பாடினார். என்னே அவர்தம் தமிழ் அன்பு'. எத்துணை அழகிய தெய்வீகக் கற்பனை! உலகப்படைப்பையே தெய்வீகத் தமிழ்க் காட்சியாகக் கண்ட அப்புலவன் புகழ்ஓங்கட்டும்!

முருகப்பெருமானை அருணகிரிநாதர் பரவிப் பாடிப் பணியும் கந்தரலங்காரத்தில் 'முத்தமிழால் அங்கு வைதாரையும் வாழ வைப்போன்' எனக்கூறி செந்தமிழ்த் தெய்வமான முருகனுக்குத் தமிழின் மீதுள்ள பேரன்பைப் பாராட்டியருளினார்.

''வள்ளிநாயகியின் குரல் இசைத்தமிழ்போல் இனிமையானது. அந்த அம்மை பேசியது இயற்றமிழாக இருந்தது. வள்ளிநாயகியிடம் முருகன் கிழ வேடத்தில் வந்து 'என்னைத் திருமணம் புரிந்து கொள்'' எனக் கூறியபோது, கோபித்து, கையையும் தலையையும் ஆட்டி, 'நத்துப்புரை முடியீர்!



**கோளராவின் கொடுவிடம் தீருமே**

நல்லுணர்வு சற்றுமிலீர்! எத்துக்கு மூத்தீர்'' என்றெல்லாம் சினந்து பேசிய செயலை நாடகத் தமிழ் எனப் பாவித்து தன்னைச் சினந்து பேசிய வள்ளியைத் திருமணம் செய்து கொண்டார் முருகன். ''மொய்தார் அணிகுழல் வள்ளியை வேட்டவன் முத்தமிழால் அங்கு வைதாரையும் வாழ வைப்போன்'' என வள்ளியைச் 'செந்தமிழ்ச் செல்வி' என்றும் அவளது தமிழை முத்தமிழாக ஏற்று முருகன் அருள்புரிந்தார் என்றும் கூறினார் கருணைக்கு அருணகிரி.

வான்மீகரது இராமாயணத்தை லவகுசர்கள் இசையாகப் பாட இராமபிரான் கேட்டு அனுபவித்து மகிழ்ந்தார் என்பது வரலாறு. அதுபோல, உச்சி மேற்புலவர் கொள் கச்சியப்பர் என்னும் புலவர் பெருமான் தினமும் கந்தபுராணப்பாடல்களை எழுதி, காஞ்சியில் கந்தகோட்டம் என்னும் முருகப்பெருமானின் திருச்சன்னிதியில் வைக்க அவை தினமும் திருத்தப்பட்டு வைக்கப் பெற்றிருக்கும். காவிய நாயகன் கைதொட்டுத் திருத்திய காவியம் என அழைத்து, கந்தபுராணத்தின் பெருமைகூறி மகிழ்வார் எம்ஞானத் தந்தையாம் செந்தமிழ்ச் செம்மலான பெருந்தகை திரு முருக கிருபானந்தவாரியார் சுவாமிகள்.




**வெங்கரா உண்ட பிள்ளையை நல்குமே**

அதுமட்டுமல்ல கந்தபுராணம் அரங்கேறும் சபையில் 'திகடச் சக்கரச் செம்முகம் ஐந்துளான்'' என ஆரம்பித்தபோது, அழுக்காறு கொண்ட புலவர் ஒருவர் திகழ் தசக்கரம் என இதைப் பிரிப்பது குற்றம் என்றாராம். இந்த நூலுக்கு திகடச் சக்கரம் என முருகப் பெருமானே அடியெடுத்துக் கொடுத்தார் என்பது அப்புலவருக்குத் தெரியாது போலும்! ள என்ற எழுத்தும் த என்ற எழுத்தும் வந்தால் ட என மாற்றலாம். கற்பனை கடந்த சோதி என்பதை கற்பனைகள் தந்த சோதி எனப் பிரிக்கலாம். ழ வுடன் த வந்தால் எப்படி என்பது புலவரின் கேள்வி.

கச்சியப்பர் முருகப்பெருமானிடம் முறையிட முருகப்பெருமான் ஒரு புலவராக சபைக்கு வந்து, அப்படிச் சேர்ப்பதற்கு வீரசோழியம் என்ற இலக்கண நூல் அனுமதிக்கிறது என எடுத்துக் காட்ட புலவர் ஒப்புக்கொண்டார். கந்தபுராணம் அரங்கேறி இனிது முடிந்தது என்பது வரலாறு.

# பாரதப் போரில்

## பார்த்தசாரதி



—டாக்டர் த. அமிர்தலிங்கம்

கங்கையின் புதல்வரான வீடுமர், கௌரவ சேனைக்குப் பத்து நாட்கள் வரை தளபதியாக இருந்து போர்புரிந்து வீரமரணம் அடைந்து விட்டார். குரு துரோணரும் பத்தில் பாதியான ஐந்து நாட்கள் துரியோதனன் சேனைக்குத் தளபதியாக இருந்து போர்புரிந்து வீரமரணம் அடைந்துவிட்டார். இனி, தன் ஆருயிர் நண்பனான கர்ணனை விட்டால் தன் சேனைக்குத் தகுந்த தளபதி வேறு யாரும் இருக்க முடியாது என்று எண்ணும் துரியோதனன் கர்ணனைத் தன் தானைதளபதியாக்கிப் பாண்டவர்களை நிச்சயம் வென்றுவிடலாம் என்கிற நம்பிக்கையோடு பதினாறாம் நாள் போரை எதிர்கொள்ள குருசேத்திர யுத்தகளத்திற்குக் கர்ணனுடனே வந்து சேருகிறான்.

''கங்கை மகன் சிலையின் குரு என்பவர் காதி
மலைந்தே கையற்றார்
இங்கினி என்னுயிர் நண்பனை அல்லது வெல்ல
வல்லோர் இலரென்றே
அங்கர்பிரானை வரூதினியின் பதியாகென்று
அருள்செய்து அவனோடு
வெங்களம் உற்றனன் நஞ்சுமிழும் கொடிவேக
நாகவிறலோனே''

(பதினாறாம் போர்ச் சருக்கம், 2)

துரியோதனனும் கர்ணனும் கொண்டிருக்கும் நட்பின் ஆழத்தை இப்பொழுது நாம் நினைந்து போற்றிடக் கடமைப் பட்டிருக்கிறோம். கர்ணன் சூரிய தேவனின் புதல்வன். ''அருணவெங்கதிர் ஆயிரத்தவன் அன்பினால் உதவும் கர்ணன்'' என்கிறார் வில்லிப்புத்தூரார். பண்பிற் சிறந்த பாண்டவர்களின் தாயாகிய குந்திதேவியே கர்ணனின் தாயும் ஆவாள். குந்திபோச மன்னனுடைய அரண்மனைக்குத் துர்வாச முனிவர் வந்து தங்கியிருந்தபொழுது, அரசகுமாரியாகிய குந்தி ஓராண்டுக்காலம் சிறந்தமுறையில் பணிவிடைசெய்ய அகம்மகிழ்ந்து துர்வாசர், தேவர்களை வரவழைக்கவல்ல மந்திரங்களைக் குந்திக்கு உபதேசித்தருளினார். அம்மந்திரங்களைச் சோதித்துப் பார்த்திட விழைந்த குந்தி, ஒருநாள் அரண்மனை உப்பரிகையில் வெண்ணிலவு காயும் இரவு வேளையில் சூரியதேவனுக்குரிய மந்திரத்தை உச்சரிக்க, சூரியனும் உடன் பிரசன்னமாகிக் குந்தியை அணைந்து, கர்ணனை மகனாகவும் உடன் கொடுத்து, மணம் ஆகாதவளான குந்தியை மறுபடியும் கன்னியாக்கி மறைந்தான். கர்ணன் சூரியனைப் போன்ற பேரழகோடும் இந்திரன் முதலான தேவர்களும் இரந்து வேண்டுவனவற்றை ஈகும் வள்ளண்மையோடும் பிறந்தமையை வில்லிப்புத்தூரார்

''அந்தியாரழல் எனப் பரிதியின் ஒளிஅடைந்த
பின் அணிமாடக்
குந்திபோசன் மாமடமகள் எழில்நலம்
கொண்ட கொள்கையள் ஆகி
இந்திராதியர் அவரவர் முகமலர்ந்து இரந்தன
தரத்தக்க
மைந்தன் ஆனவன் ஒருவனைப் பயந்தனள்
மாசிலாமணி என்ன''

(சம்பவச் சருக்கம் 38)

என்று வருணித்திருக்கிறார்.

இத்தகைய அழகும், அறிவும், கொடைக்குணமும் சான்ற குழந்தையைப் பாசம் காட்டிப் பரிவு காட்டிப் பேணி வளர்ப்பதற்குத்தான் குந்தி கொடுத்து வைக்கவில்லை. திருமணம் ஆகும்முன்பே கையில் குழந்தையோடு நிற்கும் தன் காரணமாகத் தன் தந்தையை வையம் பழித்துவிடக்கூடாது என்பதற்காகவே பச்சிளம் குழந்தையை ஒரு பெட்டியில் வைத்துக் கங்கையாற்றில் விட்டுவிட்டாள் குந்தி. இந்தப் பெட்டியில் இருந்த குழந்தையைத் தான் திருதராட்டிரனின் தேரோட்டியாகிய சூதன் கண்டெடுத்து, ஆதவன் அசரிரீயாக இட்ட ஆணையின்படி ''கர்ணன்'' எனப் பெயரிட்டு வளர்த்துவந்தான். கர்ணனின் அழகும் அறிவும் சூதனுக்கு ''இவனைப் பெற்றவர்கள் யாரோ தேவர்களாகத்தான் இருக்க வேண்டும்'' என்ற உணர்வைக் கொடுத்திருந்திருக்க வேண்டும். ஆகவே, அவனும் கர்ணனிடம் ''நீ என் சொந்த மகன் அல்ல, என்னால் கண்டெடுக்கப்பட்ட மகனே நீ'' என்ற உண்மையையும் கூட மறைக்காமல் சொல்லியே வளர்த்து வந்திருக்கிறான். ஆகவே கர்ணனைத் ''தன்னைப் பெற்றவர்கள் யார்? பெற்றுத் தன்னைப் பெட்டியிலே போட்டு ஆற்றிலே தள்ளிவிட்டவர்கள் யார்?'' என்ற வேதனை உணர்வு அவனுடைய இளமைக்காலம் முதலே வாட்டி வதைத்து வந்திருக்கிறது.

''குலவிச்சை கல்லாமல் பாகப்படும்'' என்பது பழமொழி. சூரிய குமாரன் ஆகிய கர்ணனிடம் வீரக்கலைகள் அனைத்தும் கல்லாமலே வந்து பொருந்தின. பரசுராமனைத் தன் குருவாகக் கொண்டும் போர்க்கலைகள் அனைத்தையும் ஐயம் திரிபின்றித் தெளிந்து கொண்டான் கர்ணன். அர்ச்சுனனுக்கு நிகரான வில்லாற்றல் கர்ணனிடமும் இருந்ததைக் கண்டு, கர்ணனைத் தன் நண்பனாகக்

கொண்டான் துரியோதனன். கௌரவர், பாண்டவர்களுக்குத் துரோணர் வித்தைகள் பயிற்றுவித்துப் பயிற்சிகள் நிறைவு செய்த நன்னாளில் அத்தினாபுரி அரசவையில் அர்ச்சுனன் முதலானோர் தங்கள் தங்கள் திறமைகளைக் காட்டி, வீரசாகசம் புரிந்தனர். அவையினர் அர்ச்சுனன் செய்து காட்டிய வித்தைகளைக் கண்டு அதிக உற்சாகத்துடன் கரவொலி எழுப்பிப் பாராட்டினர். கர்ணன் அவ்வவையில் தன்னைச் சூதனின் மகனாக அறிமுகப் படுத்திக் கொண்டு தானும் தன் திறமைகளைக் காட்ட அவையினர், அர்ச்சுனனுக்கு எழுப்பியதைக் காட்டிலும் அதிகமாக கரவோலி எழுப்பிக் கர்ணனைப் பாராட்டலானார்கள். அப்பொழுது தான் கர்ணனிடம் வெறுப்பினை உமிழ்ந்து கிருபர் முதலான சிலர் ''தேரோட்டி மகனான கர்ணன், அரசகுமாரர்களுக்கு இணையாக எப்படி இவ்வவையில் வந்து நிற்கலாம்?'' எனக் கேட்டுக் கர்ணனை அவமானப்படுத்தவும் செய்தார்கள்.

''சூதன் மைந்தன் வேலையேழு சூழு மேதினிக்
கெலாம்
நாதன் மைந்தனுடன் வெகுண்டு நவிலுதற்கு
நண்ணுமோ?''

(வாரணாவதாரச் சருக்கம்67)

என்று கிருபர் கேட்டுக் கர்ணனைச் சிறுமைப்படுத்தியபோதுதான் கர்ணனுக்குப் பரிந்துபேசித் தோள் கொடுக்க முன்வந்தான் துரியோதனன். ''கற்ற சான்றோர், எழில் நிறைந்த கன்னியர், கொடையாளர்கள், மகாவீரர்கள், அரசர்கள், தவசிகள் இவர்கள் எல்லாம் எக்குலத்தில் பிறந்தவராயினும் சிறப்புக்குரியவர்களே. தூணில் பிறந்தார் என்று நரசிங்கத்தை நாம் வணங்காமல் இருக்கிறோமா? சிவபெருமானும் கற்பாந்த காலத்தில் மூங்கிலில் தோன்றினார் என்பதாக ஒருவரலாறு உள்ளதே! அகத்தியரும், துரோணரும் கும்பத்தில் அல்லவா தோன்றினார்கள். கர்ணன் தோன்றிய குலத்தை குறைகூறும் கிருபரே! நீர் தோன்றியதும், முருகப் பெருமான் தோன்றியதும் நாணல் காட்டில் அல்லவா! கர்ணனின் வீரத்தைக் கொண்டாட மனமில்லாமையானால் ஏன் அவன் பிறப்பைக் குறை கூறித் தாழ்வு படுத்த வேண்டும்?''

''கற்றவர்க்கும் நலன் நிறைந்த கன்னியர்க்கும்
வண்மைகை
உற்றவர்க்கும் வீரரென்றுயர்ந்தவர்க்கும்
வாழ்வுடைக்
கொற்றவர்க்கும் உண்மையானகோதில்
ஞான சரிதராம்
நற்றவர்க்கும் ஒன்று சாதி நன்மை தீமை
இல்லையால்''

''அரிபிறந்ததன்று தூணில் அரனும் வேயிலாவி
னான்
பரவைஉண்ட முனியும்இப் பரத்துவாசன்
மைந்தனும்
ஒருவயின் கண் முன்பிறந்து, ஒண்சரத்தின்
அல்லவோ
அரிய வென்றி முருகவேளும் அடிகளும்
பிறந்ததே''

(வாரணாவதாரச் சருக்கம் 68, 69)

இவ்வாறு கர்ணனுக்காகப் பரிந்துபேசி உடன் அங்க தேசத்திற்கும் கர்ணனை மன்னனாக அறிவித்துத் தான் அமர்ந்திருந்த சிம்மாசனத்திலேயே கர்ணன் அமர்வதற்கும் பாதி இடம் கொடுத்து கர்ணனை ஆதரித்தவன் துரியோதனன் ஆவான். துரியோதனன் தனக்கு எத்தகைய மரியாதையைத் தன் தம்பிகளும் நண்பர்களும் அளிக்கிறார்களோ அத்தகைய மரியாதையில் ஒருசிறிதும் குறைவின்றி கர்ணனுக்கும் அளிக்க வேண்டும் என்று கட்டளையிட்டிருந்தான் என்றால், அவன் நட்பிற்கு அளித்திருந்த சிறப்பினை என்னவென்பது.

ஒருநாள் கர்ணன், துரியோதனனைக் காண வேண்டிஅவனுடைய அரண்மனைக்கு வந்தான். அப்பொழுது அரண்மனையில் துரியோதனன் இல்லை. ''வரும நேரம் தான்'' என்று கர்ணனை வரவேற்ற அவனுடைய மனைவி ,''அவர் வரும் வரைக்கும் சொக்கட்டான் ஆடலாமே'' என்று கூற கர்ணனும் இசைந்து ஆடிக்கொண்டிருந்தான். ஆட்டத்தின் இடையிலேயே துரியோதனன் வந்துவிட, கணவனுக்கு மரியாதைசெலுத்தும் விதத்தில் பானுமதியும் தன் ஆசனத்திலிருந்து எழ ''ஆட்டத்தினடையில் ஏன் எழுகிறாய்?'' எனக் கேட்டுக் கர்ணனும் கைகளால் தடுக்க, அதனால் பானுமதியின் இடையில் அணிந்திருந்த மேகலை அறுபட்டு மணிகள் சிதறி ஓட, அப்பொழுது தான் கர்ணனும் துரியோதனைக் கண்டவனாய், வரம்பை மீறி நடந்து கொண்டுவிட்ட தன்னை எப்படி துரியோதனன் கருதுவானோ என எண்ணித் திகைத்து மயங்க, துரியோதனன் அங்கு நடைபெற்றது எதனையும் தவறெனவே எண்ணிடாமல் ''எடுக்கவோ கோர்க்கவோ'' என்று இயல்பாகக் கேட்டு உடன் மணிகளைக் குனிந்து எடுக்கவும் தொடங்கிய பெருங்குணத்தை என்னவென்பது? துரியோதனன் துட்டனே ஆனாலும் கர்ணனைப் பொறுத்தவரையில் உத்தமன். நட்பிற்கு இலக்கணம் ஆனவன்.

சூரியனின் புதல்வனே கர்ணன் என்பதும், குந்திபெற்ற முதல்மகனே கர்ணன் என்பதும் கர்ணனுக்கே தெரிந்திடாத காலத்திலேயே கர்ணனைத் தோழனாகக் கொண்டு சிறப்புச் செய்தவன் துரியோதனன். துரியோதனன் காட்டிய நட்பின் ஆழத்தினால்தான், குந்தியைத் தன் தாயாகக் கர்ணன் பின்னால் தெரிந்து கொண்டபிறகும் கூட புதியதாக வந்த பாசம் அவனுடைய பழமையான நட்பை மாற்றிடவில்லை. ''மகனே கர்ணா! நீ வேறுயாரோ அல்ல, என்னுடைய மகன்! பாண்டவர்கள் உன் தம்பிகள்! நீ உன் தம்பிகள் பக்கம் வந்துவிடு. பாண்டவர்கள் தங்களுக்குரிய அரசை உனக்குத் தருவார்கள். குருகுல அரசர்களுக்கெல்லாம் அரசனாக நீ வாழலாம்'' என்று தாய் வேண்டிக் கெஞ்சிய போதும்கூட கர்ணன் என்ன சொன்னான்?

''பெற்றநீர் மக அன்பிலாமையோ அன்றிப்
பெரும்பழி நாணியோ
அற்றைநாள் தொடங்கி என்னை இன்றளவும்
விடுத்தீர் ஆருயிர்த்துணை
கொற்றமா மகுடம் புனைந்தரசளித்துக் கூட
வுண்டு உரியதம்பியரும்
சுற்றமானவரும் என்னடி வணங்கத் தோற்ற
மும் ஏற்றமும் அளித்தான்''

''மடந்தைபொன்திரு மேகலை மணியுகவே
மாசறத் திகழும் ஏகாந்த
இடந்தனித் புரிந்தே நான் அயர்ந்திருப்ப
எடுக்கவோ கோக்கவோ என்றான்

## அமரர் எம்.ஜி.ஆர். பொன்மொழி

மரணம் யாருக்கு எப்போது என்பது தெரியாது. நீர்க்குமிழி போல் வாழ்பவன் மனிதன் என்பார்கள். இதைத் தெரிந்தவர்கள் கூட 100 ஆண்டு வாழ்வேன், 200 ஆண்டு வாழ்வேன் என்கிறார்கள்.

''உன் பணி முடியும் வரை உன்னை யாரும் அழிக்க முடியாது. அதுபோல் பணி முடிந்த பின்னும் யாரும் இருக்க முடியாது'' என்று என் தாய் கூறுவார். என் தாய் கூறியது போல் என் பணி முடியும் வரை என்னை யாரும் அழிக்க முடியாது.''

—பசும்பொன் மாவட்ட அமைப்புப் பணியைத் தொடங்கி வைத்தபோது அமரர் எம்.ஜி.ஆர். தெரிவித்த கருத்து.

கர்ணனிடம் அர்ச்சுனன் மேலும் கடுமையாகப் போரிடாமல் ''இன்று போய் நாளை வா'' என்று கூறித் தானும் தன் பெருந்தன்மையைக் காட்டுகிறான்.

''அன்று போர் புரி சேனையின் பதியான வீரனை நீ
இன்று போய் இனி நாளைவா என இனிதியம் பினனால்
வென்றிகூர் வரிவின்மையால் அடல் வெவ்வ ரக்கரை முன்
கொன்ற காளையை ஒத்த பேரிகைகொண்ட ஆண்மையினான்''
(பதினாறாம் போர்ச் சருக்கம்38)

இராவணன் முதல்நாள் போரில் தோற்று ஆயுதங்கள் அழிந்து நின்ற போது இராமன் ''இன்றுபோய் நாளை வா'' என்று கூறிஅனுப்பி வைத்ததைப் போலவே, அர்ச்சுனனும், தனக்கு ஈடு கொடுக்க முடியாமல் தளர்ந்த கர்ணனை இன்னும் ஒருநாள் தளபதியாக இருந்து போர்புரியட்டும் என்கிற தயாள உள்ளத்தோடு ''இன்று போய் நாளைவா'' என்று கூறி அனுப்புகிறான். தன் தம்பி நகுலனைக் கொல்ல வாய்ப்பிருந்தும் கொல்லாமல் விட்ட கர்ணனின் கருணைக்கு அர்ச்சுனன் தானும் பிரதியுபகாரம் செய்வதைப் போல் ''இன்றுபோய் நாளைவா'' என்று கூறிக் கர்ணனை அனுப்புவதாக நாம் கொண்டாலும் அதுவும் பொருந்துவதே ஆகும்.

இதே நேரத்தில் இதே யுத்தகளத்தின் மற்றொருபுறம் தருமரும் துரியோதனனும் முதன்முதலாக நேருக்கு நேர்நின்று போர்புரிந்து கொண்டிருக்கிறார்கள். ''நீதிக்கொரு நிலையான்'' ''தருமத்தின் உயிர் என்று சொலத்தக்கான்'' என்று தருமரைப் போற்றும் வில்லிப்புத்தூரார், தருமரின் சிறந்தபோர் ஆற்றலையும் விரிவாகக் காட்டுகிறார். ''துரியோதனா வா! இது என்ன எளிதில் வென்றுவிடக்கூடிய சூதுபோர் என்று எண்ணினாயா? இது மோது போர். இதில் வெற்றிகொள்ள வேண்டுமானால் வீரம் வேண்டும்! அந்த வீரமும், நெஞ்சில் ஈரமும் தானே உன்னிடத்தில் பஞ்சம்'' என்று தருமர் துரியோதனனைக் கேலி புரிவதோடு துரியோதனன் இருதோள்களையும் ஏழுகணைகளால் துளைக்கிறார். துரியோதனன் தருமரின் கணைகளைத் தாங்கிக்கொண்டவனாய் தானும் பல கணைகளைத் தருமர்மேல் ஏவுகிறான். இருவரும் தங்கள் தங்கள் தோள்களைக் கணைகள் ஊடுருவ, காயம்பட்ட இடங்களில் குருதி பெருக கோபமும் பொங்கிப் போர்புரிகிறார்கள்.

தருமர், நான்கு வலிமை வாய்ந்த கணைகளால் துரியோதனனின் தேரைச் சிதைக்கிறார். தரைக்குத்தாவி உருளும் துரியோதனன் ஒரு வேலினை எடுத்துத் தருமர் மேல் வீசுகிறான். அவ்வேலையும் ஓரம்பினால் இருதுண்டுகளாக்கி வெற்றிப் புன்னகை புரிகிறார் தருமர். நிராயுதபாணியாகத் தரையில் திகைத்து நிற்கும் துரியோதனன் உயிரைப் பறிக்கும் வகையில், தருமர் மேலும் பல அம்புகளைப் பாய்ச்சிவிட முடியும். ஆனாலும் தருமர்தான் அவ்வாறு செய்யாமல் ''துரியோதனா! எமனுலகிற்கு உன்னை நான் இப்போதே அனுப்பி வைத்துவிட முடியும். உன்னைக் கொல்வதாக வீமன் செய்திருக்கும் சபதம் பொய்த்துவிடக் கூடாது என்பதனால் நான் உன்னை இப்பொழுது உயிரோடு விடுகிறேன். உயிர் பிழைத்துப்போ'' என்று கூறுகிறார். வஞ்சனையே வடிவமான துரியோதனன் தருமருக்குப் பின்வாங்கிச் செல்பவன் போல் நடித்துப் பின் சென்று, சிதைந்த தன் தேரிலிருந்து கதாயுதம் ஒன்றையும் விரைந்து எடுத்துத் தருமர் மேல் வீசுகிறான். இதைச் சற்றும் தருமர் எதிர்பார்க்கவில்லை, என்றாலும் சடாரென தான் விலகிக் கொண்டு விடுவதோடு, தானும் ஒரு வேலினை எடுத்து துரியோதனன் மேல் விட்டெறிய துரியோதனனின் மார்பைத் தருமரின் வேலும் போய்தாக்க, அவனும் மயங்கி மண்ணில் சாய்ந்து விடுகிறான்.

''துரியோதனன் சாய்ந்தான், தருமரின் வேல் பாய்ந்து விட்டது'' என்ற சேதி களமெங்கும் வேகமாகப் போய் பரவ துரியோதனன் இருக்கும் இடத்திற்கு கர்ணன், அசுவத்தாமா, கிருபன், சல்லியன் முதலானோர் விரைந்துவந்து அவனைச் சூழ்ந்து கொள்ளுகிறார்கள். அவர்களால் தருமருக்கு ஏதும் ஆபத்து உண்டாகலாம் என எண்ணி அர்ச்சுனன், வீமன், திட்டத்துய்மன் முதலியோரும் வந்து தருமரைச் சூழ்ந்து கொள்கிறார்கள். இத்தகைய ஒரு பதட்டமான சூழ்நிலையில் மேலும் போர் நிகழ வாய்ப்பின்றி ஆதவன் மேலைக்கடலில் போய்மறைய பதினாறாம் நாள் போரும் நிறைவு பெற்று விடுகிறது.

இவ்வாறு குறிப்பிடத்தக்க பேரிழப்பு ஒன்றும் இன்றி இப்பதினாறாம்நாள் போர் நிறைவு பெறுவது ஓரளவிற்கு ஆறுதலாக இருந்தபோதிலும், நாளைய பதினேழாம் நாள் போரில் ஏற்பட இருக்கும் அந்தப்பேரிழைப்பினை இப்பொழுது எண்ணும்போதே என் நெஞ்சம் துடிக்கின்றது. கண்களும் கடலாகின்றது. தருமத்தாயே கண்ணீர் வடித்து கதறக்கூடிய ஓர் பேரிழப்பினை நாம் நாளை காண இருக்கிறோம். அந்த இழப்பினைத் தாங்கிக் கொள்ள எதையும் தாங்கும் வைர நெஞ்சத்தை நமக்கு இறைவன் அளித்திடுவானாக!


(தொடரும்)


வெளியிடுபவர் : ஆணையர், தமிழ்நாடு அரசு இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை, சென்னை—600 034
ஆசிரியர் : கவிஞர் டாக்டர் த. அமிர்தலிங்கம், M.A., Ph.D.,
அச்சிட்டோர் : தமிழரசு அச்சகம், அரசினர் தோட்டம், சென்னை—600 002





நம்முடைய இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை அலுவலக வளாகத்தில் நடைபெற்ற துணை ஆணையாளர் மற்றும் உதவி ஆணையாளர் மறுபயிற்சி வகுப்புகளில் தவத்திரு சச்சிதானந்த சுவாமிகள், ஓய்வுபெற்ற நீதிபதி திரு கிருட்டிணசாமி, தமிழக அரசின் உள்துறைச் செயலாளர் திரு. டி. வி. வெங்கட்டராமன், ஐ.ஏ.எஸ்., திருமதி சௌந்தரா கைலாசம் ஆகியோர் பங்கேற்ற போது எடுக்கப்பட்ட படங்கள். இணை ஆணையர் திரு. ம. சூரியராஜ், B.A.B.L., உடன் உள்ளார்.




















அமெரிக்காவில் கமலாலயம் கண்ட தவத்திரு சச்சிதானந்த சுவாமிகளுக்கு நம்முடைய அறநிலையத்துறை அண்மையில் பாராட்டு விழா நடத்தியது. இவ்விழாவில் மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் திருமிகு ஆர்.எம்.வீ., மாண்புமிகு அறநிலையத்துறை அமைச்சர் திருமிகு வி. வி. சுவாமிநாதன், பி.எஸ்.சி., பி.எல்., மாண்புமிகு தமிழ் வளர்ச்சி உயர்நிலைக் குழுவின் தலைவர் திருமிகு டாக்டர் ம.பொ.சி., ஆணையர் திரு. தி. இராச. கல்யாணசுந்தரம், ஐ.ஏ.எஸ். ஆகியோர் கலந்து கொண்டு சுவாமிகளைப் பாராட்டினார்கள்.